Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37 | கதிர் : 269 | திங்கட்கிழமை 22 ஒகஸ்ட் 2022 | ஆவணி 06 ஆம் நாள் வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 12 | விலை : ரூ. 50

முச்சந்தி முரளி



"அப்ப இனிமேல் கோர்ணவெந்தில கோழி மேய்க்கிறவைக்கு கஷ்டகாலம் எண்டு சொல்லுங்கோ"

# நாட்டை மீட்டெடுக்க தமிழ்த் தலைவர்களும் கைகோர்க்க வேண்டும்

## ஜீ.ஜீ.பொன்னம்பலத்தை உதாரணம் காட்டி அநுராதபுரத்தில் ஜனாதிபதி ரணில் உரை



கொழும்பு, ஓகஸ்ட் 22

இந்த நாட்டுக்கு சுதந்திரம் கிடைக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட்டனர். சுதந்திரம் பெற்ற பிறகுதான் பிரிந்தனர். இப்போது நமக்கு முன்னால் ஒரு கடினமான காலம் உள்ளது. நாம் அனைவரும் ஒன்றுபடவேண்டும். சுதந்திரம் பெற இடதுசாரித் தலைவர்கள் ஒன்று சேர்ந்தனர். ஜீ.ஜீ.பொன்னம்பலம் போன்ற தமிழ்த் தலைவர்களும் இருந்தனர். அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்தனர். நாம் அனைவரும் மீண்டும் இணைந்து செயற்படவேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். 11 ➤

## 'ரணில் நாட்டுக்கு வரம்'



கொழும்பு, ஓக. 22

ஒரு விடயம் நடக்கவேண்டுமாயின் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டுமென்ற வார்த்தைகளை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இன்று இந்த நாட்டின் காவலராக மாறி கட்டியெழுப்பும் பொறுப்பை சுமந்து வருகின்றார். தூர நோக்குடன் செயற்படும் தலைவர் என்ற வகையில் இந்த நாட்டின் பொறுப்பை ஏற்றுள்ள ஜனாதிபதி ரணில், நிச்சயம் நாட்டைக் கட்டியெழுப்புவார் என்று மிஹிந்தலை ராஜமஹா 11 ➤

முட்டையைத் தொடர்ந்து

## கோழி இறைச்சிக்கும் கட்டுப்பாட்டு விலை

கொழும்பு, ஓக. 22

கோழி இறைச்சிக்கான கட்டுப்பாட்டுவிலையை விதிக்க அரசாங்கம் அவதானம் செலுத்தியுள்ளது. 10 ➤

## நல்லாட்சியில் முடியாததை இப்போதாவது செய்வோம்

### ஜனாதிபதி ரணில் முன்பாக துமிந்த திஸாநாயக்க தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 22

2015 இல் இருந்து இந்த நாளுக்காகத் காத்திருக்கிறோம். ஆனால், அன்று அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை. இன்று ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, முக்கியமான அரசியல் நீரோட்டங்கள் ஒன்றாக 10 ➤

## வேலையைச் செய்யுங்கள் இல்லையேல் வீடு செல்லுங்கள்

### அரச பணியாளர்கள் மீது ஜனாதிபதி ரணில் பாய்ச்சல்

கொழும்பு, ஓக. 22

வேலை செய்ய முடிந்தால், வேலை செய்யுங்கள், முடியாவிட்டால், வீட்டுக்குச் 12 ➤

## வசந்த முதலிகே நேற்று சி.ஐ.டி.யிடம் ஒப்படைப்பு

கொழும்பு, ஓக. 22

கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வரும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் 12 ➤

## பெற்றோலியக் கூட்டுத்தாபன மறுசீரமைப்புக்கு எதிர்ப்பு

### ஆனாலும் அமைச்சர் விடாப்பிடி

கொழும்பு, ஓக. 22

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் உத்தேச மறுசீரமைப்புத்திட்டத்துக்கு தொழிற்சங்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. 12 ➤

## பயங்கரவாதிகளிடமிருந்து நாட்டைக் காத்தவர் ரணிலே

### முன்னாள் அமைச்சர் புகழாரம்

கொழும்பு, ஓக. 22

அன்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச பயங்கரவாதிகளிடமிருந்து 12 ➤

## ஒரு தொகுதி அரசியல்கைதிகள் முதற்கட்டமாக விடுவிப்பு

### நீதி அமைச்சர் திட்டவட்டம்

கொழும்பு, ஓக. 22

முதற்கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ்அரசியல் கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளுக்கும் 10 ➤

## பெற்றோல் கொள்வனவு: யாழில் கடும் மந்தம்!

### 'கியூஆர்' முறையால் வந்த விளைவு

யாழ்ப்பாணம், ஓக. 22

நாள் ஒன்றுக்கு 25 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு பெற்றோல் விநியோகிக்கக்கூடிய இயலுமை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு உள்ளபோதும் எரிபொருள் நிரப்பு 11 ➤

## மண்ணெண்ணெய் இனி 340 ரூபா

### 4 மடங்கால் எகிறியது

யாழ்ப்பாணம், ஓக. 22

மண்ணெண்ணெயின் விலை நேற்று நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் 12 ➤

நல்லூரில்

## புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 22

சரித்திரப் புகழ்மிக்க யாழ்ப்பாணம், நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் புனருத்தாரணம் செய்யப்பட்ட சித்திரத் 10 ➤



லொறி - மோ.சைக்கிள்

## நேருக்குநேர் மோதி இளைஞன் சாவு!

வவுனியா, ஓக. 22

லொறியுடன் , மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதில் இளைஞரொருவர் உயிரிழந்துள்ளாரென வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர். 11 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2030 ஆண்டுவரை ரணிலே ஜனாதிபதி

*பாலித தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 22

நாட்டின் ஜனாதிபதியாக எதிர்வரும் 2030ஆம் ஆண்டு வரை ரணில் விக்கிரமசிங்கவே பதவி வகிப்பார். அதில் எந்த வித மாற்றுக்கருத்தும் கிடையாது. எனவே சகல கட்சிகளும் எந்தவித பேதமும் இன்றி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

ஐ.தே.க. தலைமையகமான ஸ்ரீகொத்தாவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்று உருவாக்கப்பட்ட எந்தவொரு அரசியல் கட்சியும் இதுவரையில் வெற்றி பெற்றதில்லை. அதே போன்று எந்தவொரு அரசியல் தலைவரும் வெற்றியடைந்ததில்லை. ஐக்கிய மக்கள் சக்தி தொடர்பில் பேசுவது பிரயோசனமற்றது. ஏனைய கட்சிகளுக்கும் அதே நிலைமையே ஏற்படும்.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவும் இந்த நாட்டின் பிரஜையாவார். அவரது திறமையற்ற நிர்வாகம் மற்றும் பலவீனத்தின் காரணமாகவே நாடு இந்த நிலைமையை அடைந்துள்ளது. ஆயினும், நாட்டின் பிரஜை என்ற ரீதியில் அவருக்கு இங்கு வசிப்பதற்கான உரிமை காணப்படுகிறது - என்றார். (ம)

## இராணுவ கொமாண்டோக்களால்
# கோத்தாபயவுக்கு உச்சப் பாதுகாப்பு

**கொழும்பு, ஓக. 22**

**இலங்கைக்கு மீண்டும் வரவுள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கு இராணுவ கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்படும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.**

தற்போது தாய்லாந்தில் ஜனாதிபதி கோத்தாபய தங்கியுள்ளார்.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கு அவர் தங்கியுள்ள ஆடம்பர விடுதி அறையை விட்டு வெளியில் செல்வதற்குக்கூட தாய்லாந்து அரசாங்கம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

இந்தநிலையில் எதிர்வரும் 24ஆம் திகதி அவர் இலங்கைக்குத் திரும்புவுள்ளார் என்று கருதப்படுகின்றது. கோத்தாபய இலங்கைக்குத் திரும்பும் பட்சத்தில் அவருக்கு இராணுவக் கொமாண்டோக்களின் பாதுகாப்பு வழங்கப்படும் என்று கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

எனினும் கோத்தாபய ராஜபக்ச இலங்கைக்குத் திரும்பும் திகதியில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்றும் கருதப்படுகின்றது. முன்னதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்த பஸில் ராஜபக்ச, கோத்தாபயவுக்கு எட்டு அடுக்குப் பாதுகாப்பு வழங்கவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கோத்தாபயவுக்கு
# அமெரிக்க குடியுரிமை: ஏற்பாடுகள் ஆரம்பம்!

தாய்லாந்தில் தஞ்சமடைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அமெரிக்காவில் நிரந்தரக் குடியுரிமை பெறுவதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளார் எனக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த 2003ஆம் ஆண்டு அமெரிக்க குடியுரிமையைப் பெற்ற கோத்தாபய ராஜபக்ச 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது அமெரிக்க குடியுரிமையை இரத்துச் செய்திருந்தார். அவரது மனைவி, மகன் மற்றும் மருமகள் ஆகியோர் அமெரிக்கப் பிரஜைகள் என்பதால், முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய அமெரிக்கக் குடியுரிமையை மீளப்பெறும் வாய்ப்புள்ளது என்றும் விரைவில் அதற்கான நடவடிக்கைகளை அவர் ஆரம்பிப்பார் என்றும் தகவல்கள் வெளிவந்திருந்தன. இந்த நிலையில், அவர் அமெரிக்கக் குடியுரிமையைப் பெறும் பூர்வாங்க ஏற்பாடுகளை ஆரம்பித்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# கோத்தாபய மீண்டும் அரசியலுக்கு வரார்!

*பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 22

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீண்டும் அரசியலுக்கு வருவது தொடர்பில் எதையும் அறிவிக்கவில்லை என பொதுஜன பெரமுனவின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இந்த நாட்டின் சாதாரண குடிமக்களுக்கு இருக்கும் சுதந்திரம் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவுக்கும் இருக்கவேண்டும். அவர் தனது அமெரிக்கக் குடியுரிமையைத் துறந்து இந்த நாட்டுக்குச் சேவை செய்ய வந்தார். எனவே, அவர் போராளிகளுக்குப் பயந்து வெளிநாடுகளில் ஒளிந்து கொள்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது அவரது மனித உரிமை மீறலாகும். எனவே, முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி, அவர் இந்த நாட்டுக்கு திரும்புவதற்குத் தேவையான வசதிகளைச்செய்து கொடுக்குமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இடைக்கால அரசாங்கம் அல்லது இடைக்கால நிர்வாகத்தை விரைவில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்துள்ளோம். ஏனெனில், இந்தப் பிரச்சினையை மேலும் இழுத்தடிக்கமுடியாது. பொதுஜன பெரமுன மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றது - என்றார். (ம)

# கோத்தா வெளியேறுவதை தடுத்து நிறுத்தியிருப்பேன்

*ஆனால் அவர் கேட்கவில்லை என மஹிந்த ராஜபக்ச தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 22

நான் போகலாமா? என கோத்தாபய ராஜபக்ச என்னைக் கேட்டிருந்தால் வேண்டாம் என்றேசொல்லியிருப்பேன் என முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பு ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதைத் தெரிவித்துள்ளார்.

'பொதுஜன பெரமுனவின் தலைவராகத் தொடர்ந்தும் நீடிப்பீர்களா?' என்ற கேள்விக்கு, 'அதனைக் கட்சியே தீர்மானிக்கவேண்டும். அவ்வாறு இல்லாவிட்டாலும் நான் ஒரு சட்டத்தரணி. என்னால் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாகப் பணிபுரிய முடியும். தேவையென்றால் அதனை செய்யத் தயார்' - என்றார்.

முன்னாள் ஜனாதிபதி 'நாட்டிலிருந்து தப்பியோடுவது குறித்து உங்களுடன் கலந்தாலோசனை மேற்கொண்டாரா?' என்ற கேள்விக்கு, 'அவர் தான் செய்துமுடித்திருக்கவேண்டிய விடயத்தை செய்து முடித்திருக்கவேண்டும். ஆனால், அவர் அரசியல்வாதியில்லை. கோத்தாபய ராஜபக்ச சென்றிருக்கக்கூடாது. இலங்கையிலிருந்து வெளியேற தீர்மானித்ததும், 'நான் போகின்றேன்' என அவர் குறிப்பிட்டார். நான் எதனையும் தெரிவிக்கவில்லை. 'நான் போகலாமா?'



என கோத்தாபய ராஜபக்ச என்னைக் கேட்டிருந்தால், 'வேண்டாம்' என்றே சொல்லியிருப்பேன்' என மஹிந்த ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

நாடு எதிர்கொண்டுள்ள நெருக்கடிகளுக்குக் கோத்தாபய ராஜபக்ச மாத்திரம் காரணமல்ல. முன்னைய அரசாங்கங்களும் நானும் கூட அதற்குக் காரணம் எனவும் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கோத்தாபய ராஜபக்ச தான் நம்பிய ஆலோசகர்களின் ஆலோசனைப்படி செயற்பட்டார். ஆகவே அவர்மீது குற்றச்சாட்டுக்களை சுமத்தமுடியாது. பாதுகாப்புச் செயலாளராக இருந்தபோது அவர் சிறந்த நிர்வாகத் திறனை வெளிப்படுத்தினார்.

ஜனாதிபதியாக அவர் கடும் அழுத்தங்களைச் சந்தித்தார். அவர் முன்னர் கடும்போக்கு வாதியாகக் காணப்பட்டார். தற்போது மென்மையானவராக மாறிவிட்டார் என்றும் மஹிந்த ராஜபக்ச மேலும் தெரிவித்தார். (ம)

# ராஜபக்சக்களை விட ரணிலே ஆபத்தானவர்

*ஹிருணிகா தெரிவிப்பு*

கொழும்பு, ஓக. 22

ராஜபக்சக்களை விடவும் ரணிலே ஆபத்தானவர் என்றும், அவர் ஒரு சர்வாதிகாரி என்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் முன்னிலையாகி வாக்குமூலமொன்றை வழங்கிய பின்னர் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு எதிரான போராட்டங்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்து, பல கோணங்களில் விசாரணைகளை மேற்கொள்ள ஜனாதிபதிரணில் விக்கிரமசிங்க தற்போது முயற்சித்து வருகின்றார். மக்கள் போராட்டங்களால்



ஏற்பட்ட அரசியல் மாற்றத்தால் நாட்டின் ஜனாதிபதியான ரணில், தற்பொழுது அதே மக் [illegible] - என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில்

# கோத்தாபய ராஜபக்சவுக்கு தண்டனை வழங்கவேண்டும்

### காணாமலாக்கப்பட்டோரால் ஐ.நா.வுக்கு மனு

**வவுனியா, ஓக. 22**

**எம்மை இனப்படுகொலைக்கு உள்ளாக்கிய முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவையும் அதனுடன் சம்பந்தப்பட்டவர்களையும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி தண்டனையை பெற்றுத்தரவேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்து, ஜெனிவாவில் இடம்பெறும் மனித உரிமை பேரவை கூட்டத்தொடரில் மனுவொன்றை சமர்ப்பிக்கவுள்ளதாக வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கம் தெரிவித்துள்ளது.**

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில், கட்சித்தலைவர்கள் மற்றும் சிவில் அமைப்புக்களுடனான சந்திப்பு வவுனியா நகரசபை மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத்தெரிவிக்கும்போதே சங்கத்தின் செயலாளர் லீலாதேவி ஆனந்தன் நடராஜா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அனைவரும் ஒருமித்து கையொப்பமிட்டு குறித்த மனுவை மனித உரிமைப்பேரவை கூட்டத்தொடருக்கு அனுப்பவுள்ளோம். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ்த் தேசியக் மக்கள் முன்னணி ஆகியவை ஆதரவு தெரிவித்துள்ளன. ஏனைய கட்சிகளும் வெளிப்படையாகக் கூறாவிட்டாலும் இதனை ஏற்றுக்கொண்டதாக அந்தந்தக் கட்சிகளின் பிரதிநிதிகள் கூறியிருக்கிக்கின்றார்கள். கட்சிகளின் தலைமைப்பீடங்களுடன் கலந்துரையாடி எமக்கு இறுதி முடிவையும் அறிவிப்பார்கள். அவர்களின் அனுமதியைப் பெற்று அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து கூடிய விரைவில் மனுவை அனுப்பவுள்ளோம்.

இதேவேளை- அரசியல் தீர்வு தொடர்பாக சர்வஜன வாக்கெடுப்பு, கையகப்படுத்தப்பட்ட நிலம், அரசியல் கைதிகளின் விடுதலை, ஆக்கிரமிக்கப்பட்ட நிலம், விகாரைகளை அகற்றல் ஆகிய ஆறு விடயங்களை உள்ளடக்கி சமூக அமைப்புகளும், பாதிக்கப்பட்ட தரப்பினருமாகச் சேர்ந்து மற்றுமொரு மனுவையும் அனுப்பத் தயாராகியுள்ளோம் -என்றார்.

(ம-14-110)





## சிறுபான்மையினரின் உரிமைக்காக முல்லைத்தீவில் மக்கள் போராட்டம்!

### மீள்குடியேற்றத்தை தாமதிப்பது ஏன்? போராட்டத்தின்போது மக்கள் கேள்வி!

முல்லைத்தீவு, ஓக. 22

வடக்கு - கிழக்கு மக்கள் தமது உரிமைகளுடன் கௌரவமாக வாழ்வதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டுமென்று, வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்று வரும் 100 நாள்கள் போராட்டத்தின் 20ஆவது நாளை முன்னிட்டு முல்லைத்தீவில் நேற்று முன்தினம் போராட்டம் இடம்பெற்றது.

இலங்கைக்குள் தமது உரிமைகளுடன்கூடிய அரசியல் தீர்வை வலியுறுத்தியும், வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்கு அதிகாரப்பரவலாக்கத்தை வலியுறுத்தியும், 13ஆவது திருத்தத்தின் தேவையை வலியுறுத்தியும் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்ததாவது:-

வடக்கு - கிழக்கு மக்களுக்கான அரசியல்தீர்வு அதிகாரப் பரவலாக்கம் என்பது இலங்கையின் அரசமைப்பின் அங்கமாயிருப்பதுடன், சர்வதேச சமூகத்தினாலும் ஐக்கிய நாடுகள் சபையினாலும் வலியுறுத்தப்படுகின்ற ஒரு விடயமாகும். ஆகவே, எமக்கான உரிமையை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கும், நட்பு நாடான இந்தியாவுக்கும், சர்வதேச நாடுகளுக்கும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வருகின்றோம். 72 ஆண்டுகளாக மாறிமாறி ஆட்சி செய்த அரசாங்கங்கள் இன்னும் சிறுபான்மை மக்களுக்கு உரிமைகளை வழங்கியதாக இல்லை. காணிப் பிரச்சினைகள் இன்னமும் இருந்துகொண்டே இருக்கின்றன. முல்லைத்தீவில் திட்டமிடப்பட்ட மீள்குடியேற்றங்கள் இன்னமும் முழுமைப்படுத்தப்படவில்லை. ஆதலால், இலங்கை அரசாங்கம் இப்போதாவது இந்த விடயங்களில் கவனம் செலுத்தி நிலையானதொரு தீர்வைப் பெற்றுத் தர வேண்டும் -என்றார்.

(ம-19)



## யாழ். மாநகர முதல்வரை சந்தித்தார் ஐ.நா. அதிகாரி

யாழ்ப்பாணம், ஓக. 22

இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியப் பணிப்பாளர் டேவிட் மெக்லக்லன் கார், யாழ்ப்பாண மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணனை நேற்றுமுன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பில் தற்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் போரின் பின்னர் நாட்டில் பல சொத்துக்கள் சேதம் ஆக்கப்பட்டமை, புலம்பெயர்ந்தோரின் உதவிகள் பெற்றுக்கொள்வதற்கான கொள்கைகள் உள்ளிட்ட பல பிரச்சினைகள் தொடர்பிலான கருத்துக்களை ஐக்கிய நாடுகள் சபையின் பணிப்பாளரிடம் மாநகர சபை முதல்வர் முன்வைத்தார்.

(ம-14-27)

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை சிங்கள மக்கள் உணர்கின்றனர்

### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, ஓக. 22

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரத்தை இப்போதுதான் சிங்கள தேசம் உணரத் தொடங்கியிருக்கிறது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். கிளிநொசச்சி உதயநகர் வட்டார மக்களுடனான சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்கள் ஒன்றியத்தின் தலைவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருக்கிறார். 'கோத்தா கோ கம' போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் மீது பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயவிருக்கிறது. இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கொடூரத்தை இப்போதுதான் சிங்கள தேசம் உணரத் தொடங்கியிருக்கிறது. இந்தக் கொடூரமான சட்டம் மூலம் தமிழர்கள் 30 வருடங்களுக்கு மேலாக துன்புறுத்தப்படுகிறார்கள். இலங்கை அரசின் தொடர் அடக்குமுறையால் வெகுண்டெழுந்த தமிழ் இளைஞர்களை அச்சுறுத்தவும் தமிழ் மக்களை துன்புறுத்தவுமே இந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் கொண்டுவரப்பட்டது. இந்தத் தடைச் சட்டத்தால் வருடக்கணக்கில் எம்மவர்கள் விசாரணை இன்றி சிறையில் இருக்கிறார்கள்.

இந்த நாடு பொருளாதார ரீதியில் அதல பாதாளத்துக்குப் போயிருக்கிறது. எதிர்வரும் மாதங்களில் இந்த நிலை இன்னும் மோசமடையலாம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறுகிறார். இந்த நிலையை ரணில் விக்கிரமசிங்க மாற்றவேண்டும் என்றால் இந்த நாட்டில் புரையோடிப்போயிருக்கிற இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு முயலவேண்டும் -என்றார்.

இந்த மக்கள் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனுடன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, கரைச்சி பிரதேசசபையின் தவிசாளர் வேழமாலிகிதன், தமிழரசுக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் ஜெயக்குமார், கட்சியின் மாவட்டக் கிளைச் செயலாளர் விஜயன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ம-26-113)

## அரசியல்கைதியின் வாழ்வாதாரத்துக்காக கடை!

### வலி. மேற்கு பிரதேசசபை தீர்மானம்

ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் அண்மையில் விடுதலை செய்யப்பட்ட சங்கானை பகுதியைச் சேர்ந்த தமிழ் அரசியல் கைதி ஒருவரின் வாழ்வாதாரத்துக்கு உதவுவதற்கு வலி.மேற்கு பிரதேசசபை முன்வந்துள்ளது. கடந்த 12 வருடங்களாக தமிழ் அரசியல் கைதியாக சிறையில் இருந்து, அண்மையில் ஜனாதிபதியின் பொதுமன்னிப்பின் கீழ் விடுவிக்கப்பட்ட நிலையில் தன்னுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த பத்திரிகை முகவராகச் செயற்படவுள்ளதாகவும் அதற்காக வலி.மேற்கு பிரதேசசபைக்குச் சொந்தமாகக் காணப்படுகின்ற சங்கானைப் பகுதியில் இருக்கக்கூடிய கடைகளில் ஒன்றை தந்துவுமாறும் குறித்த முன்னாள் அரசியல் கைதி கடிதம் மூலம் கோரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையிலேயே குறித்த கடைகளில் ஒன்றை அவருக்கு வழங்க வலி.மேற்கு பிரதேசசபை முன்வந்துள்ளது.

(ம-14-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பாவனைக்கு எதிராக சங்கானையில் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஓக. 22
போதைப் பாவனைக்கு எதிராக யாழ்ப்பாணம் சங்கானைப் பகுதியில் நேற்றுப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


சங்கானை பிரதேச இளைஞர் சம்மேளனம் மற்றும் ஜடாயு தன்னார்வ அமைப்பு ஆகியவை இணைந்து மேற்கொண்ட இந்தப் போராட்டத்தில், இளைஞர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பொது மக்கள் போராட்டம் தொடர்பில் தெரிவித்ததாவது:-

தமிழர் தாயகத்தில் நாளுக்கு நாள் போதைப்பொருள் பாவனை தீவிரமாகி வருகின்றது. அதிகாரிகளும் பொலிஸாரும் விரைந்து செயற்பட்டு இந்தப் போதைப் பாவனையைக் கட்டுப்படுத்தவேண்டும். இளைஞர்களின் எதிர்காலம் இந்தப் போதைப் பாவனையால் சிதைக்கப்பட்டுள்ளமையை உணர்ந்து அனைவரும் போதைக்கு எதிரான போராட்டத்தில் ஆத்மார்த்தமாக தம்மை ஈடுபடுத்த வேண்டும். ஊசி மூலம் போதைப் பொருளைச் செலுத்தும் இளைஞர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் மிகச் சாதாரணமான விடயங்களாக - அடிக்கடி இடம்பெறும் பத்திரிகைச் செய்திகளாக மாறிவிட்டன.

இந்த நிலைமை இன்னும் பாரதூரமாகுவதற்கு முன்னர் அனைவரும் விழிப்புடன் விரைந்து செயற்படவேண்டும் -என்றனர்.

(ச-125)



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவத்தின் சூரியோற்சவம் நேற்று முன்தினம் காலை இடம்பெற்றது. இதன்போது அலங்காரக் கந்தன் வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்காட்சி செய்தார். (ச-27)



# திருக்கேதீச்சர ஆவணம் நேற்று வெளியிடப்பட்டது

யாழ்ப்பாணம், ஓக. 22
இலங்கையில் பாடல்பெற்ற தலமான திருக்கேதீச்சரம் ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்கள் அடங்கிய 'திருக்கேதீச்சரம் ஆவணப் பெட்டகம்' நூல் வெளியிடப்பட்டுள்ளது.

நூல் வெளியீடு நிகழ்வு கலாநிதி ஆறு.திருமுருகன் தலைமையில் நேற்று யாழ். அகில இலங்கை இந்து மாமன்ற அலுவலகத்தில் இடம்பெற்றது.

நூலை பேராசிரியர் சண்முகதாஸ் வெளியிட்டு வைக்க யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பெற்றுக்கொண்டார்.

திருக்கேதீச்சரத்தின் தொன்மையையும் வரலாற்றையும் சைவத்தின் பெருமைகளையும் பறைசாற்றும் வகையில் குறித்த ஆவண நூலை கலாநிதி ஆறு.திருமுருகன் தொகுத்துள்ளார்.

(ச-20)

## இன்றைய வானிலை!

நாட்டின் தென் மேற்கு பகுதியில் (மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும்) இன்று மழை சற்று அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது என்று இலங்கை வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் விடுத்துள்ள ஊடக அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-

மேல், சப்ரகமுவ மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி, நுவரெலியா, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் -என்றுள்ளது. (ம)

# போதைப்பொருளை ஒழிக்க கடும் தண்டனை வேண்டும்

## மௌலவி எஸ்.ஏ.அசீம் தெரிவிப்பு

போதைப்பொருளை விற்பனை செய்வோர் மற்றும் அதற்கு அடிமையானோருக்கு எதிராகக் கடும் தண்டனைகளை நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமென மன்னார் பெரிய பள்ளிவாசல் மௌலவியும் பிரஜைகள் குழு ஆளுநர் சபை உறுப்பினருமான மௌலவி எஸ்.ஏ.அசீம் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பில் போதைப்பாவனைக்கு எதிராக அந்தப் பகுதி மக்கள் அண்மையில் கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

போதைப் பொருள்களுக்கு அடிமைகளாக இருப்போர் எமது கிராம மக்கள் மற்றும் மாணவர்களின் நலன்கருதி இனியாவது தங்கள் நடவடிக்கையிலிருந்து விலகிச் செல்லவேண்டும். மாணவர்களின் கல்வியை அழிக்கின்ற இந்தச் செயலை இல்லாதொழிக்க பொலிஸார் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். போதைப்பொருள் விற்பனை செய்வோரை உடன் சட்டத்தின் முன்னிறுத்தி தண்டனை வழங்கப்பட வேண்டும் -என்றார். (ச-60)



# யாழ். பல்கலை மாணவர்களுக்கு சான்றிதழ்கள், விருது வழங்கல்

பிரிட்டிஷ் கவுன்ஸிலின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களுக்கு முன்னெடுக்கப்பட்ட விசேட செயற்றிட்டத்தின் விருது மற்றும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்றது.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழில் கல்வி நிறுவனங்களை உள்ளூர் மற்றும் சர்வதேச இணைப்புகளினூடாக வலுப்படுத்தலை நோக்கமாகக் கொண்டு பால்நிலை மற்றும் அதுசார்ந்த விழிப்புணர்வு, காடாக்கல் மற்றும் காடழிப்பு சார்ந்த விழிப்புணர்வு, சேதன விவசாயம் சார்ந்த விழிப்புணர்வு, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி ஆகியவை உள்ளடக்கப்பட்டு செயற்றிட்டம் இடம்பெற்றது. செயற்றிட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ், விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன் செயற்றிட்டத்துடன் தொடர்பான ஆவணப்படமொன்றும் ஆற்றுகையொன்றும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது. (ம-14-20)

# சர்வதேச கூட்டுறவுத் தின நூற்றாண்டு நிகழ்வுகள்!

நூறாவது சர்வதேச கூட்டுறவுத் தினவிழா நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பருத்தித்துறை வீதி கொடிகாமத்தில் அமைந்துள்ள தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்க வளாகத்தில் இடம்பெற்றது.

தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் இ.அ.ஆனந்தராசா தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமாகிய மு.நந்தகோபாலன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் கி.சந்திரசேகரன், தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சு.உசா, தென்மராட்சி பிரதிக் கல்விப் பணிப்பாளர் அபிராமி இராசதுரை ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது கூட்டுறவு நிதியில் ஊக்குவிப்பு பெற்று பல்கலைக்கழக அனுமதிபெற்ற மாணவர்கள் மற்றும் ஓய்வுபெற்ற பணியாளர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ச-159)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## ஆடுவது ரணில், ஆட்டுவிப்பது பெரமுன!

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் வசந்த முதலிகேவை 90 நாள்கள் விளக்கமறியலில் வைத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கியிருக்கிறது. காலிமுகத்திடல் போராட்டம் முதல் இப்போது நடைபெற்ற பல்கலை மாணவர் போராட்டம் வரையான சகல மக்கள் எழுச்சிகளுக்கும் பின்னணியில் நின்றோரில் மிகமுக்கியமானவர் வசந்த முதலிகே. பல்கலைக்கழக மாணவர்களின் எதிர்ப்பு பேரணியில் கலந்துகொண்டு விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கும்போதே அவர் கைது செய்யப்பட்டிருந்தார். சட்ட விரோதமாக மாணவர்களை ஒன்றிணைத்து போராட்டம் நடத்தியதாக, அவர் கைதான பின்னர் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. இந்தக் குற்றச்சாட்டு உண்மையாயின் அவர் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்டிருந்தபோதே, கையும் மெய்யுமாக கைது செய்திருக்கலாமே. பேரணியில் முன்னின்று வசந்த முதலிகே போராட்டத்தை வழிநடத்தியபோது கைகட்டிப் பார்த்திருந்த பொலிஸார், அவர் தனியாளாக வீடுதிரும்பும் வழியில் கைது செய்தமைக்கு காரணம் இருக்கத்தான் செய்கின்றது. ஏனெனில் போராட்டம் நடத்தியபோது வசந்த முதலிகே மீது கைவைத்திருந்தால், ஒட்டுமொத்த மாணவர்களும் பெரும் எதிர்ப்பை வெளியிட்டு, நிலைமை களேபரமாகியிருக்கும். அதனாலேயே அவர் வீடு திரும்புகையில், தனித்திருக்கையில் வேட்டையாடப்பட்டார். இப்போது சட்டத்தின் பெயரால் கிட்டத்தட்ட மூன்று மாதங்களுக்கு வசந்த முதலிகேவை சிறையில் அடைத்து, விசாரிக்க இருக்கிறது அரசு.

வசந்த முதலிகே மட்டுமல்ல, காலிமுகத்திடல் போராட்டத்தை முன்னின்று நடத்திய பலர் இப்போது கைதுகள் மூலமும், அச்சுறுத்தல் மூலமும், பதவிகளை வீசியெறிந்ததன் மூலம் அரசியல் ரீதியான போராட்டக் களத்தில் இருந்து அகற்றப்பட்டிருக்கிறார்கள். அதுவும் அவர்கள் கைது செய்யப்படவேண்டிய குற்றவாளிகள் என்பதைப் போன்ற குற்றச்சாட்டுக்கள் சோடிக்கப்பட்டு, மக்கள் மனதில் அந்தக் கைதுகளால் அரசுக்கு எதிரான எண்ணமேதும் உருவாகாத வகையில், போராட்டக் களத்தின் முன்னணிச் செயற்பாட்டாளர்களின் குரல்வளையை ரணில் அரசாங்கம் நசுக்கியிருக்கிறது. ஏறக்குறைய சட்டத்தின் பெயரால் ஒரு சர்வாதிகார ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது. வெளிப்பூச்சுக்கு சட்டத்தின் ஆட்சி நடப்பது போலத் தோன்றினாலும், உண்மையில் ரணில் சர்வாதிகார ஆட்சியையே இப்போது இலங்கையில் பரவலாக்கியிருக்கிறார். இன்னும் கூர்ந்து நோக்கினால், ரணிலின் சர்வாதிகார ஆட்சி என்பதைவிடவும், பெரமுனக் கட்சியின் சர்வாதிகார ஆட்சி என்றும் சொல்லலாம். அந்தளவுக்கு பெரமுன கட்சி மறைமுகமாக, ரணிலை ஒரு கருவியாக்கி, தன் இஷ்டப்படி இந்த நாட்டை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.

இப்போது ரணிலை ஜனாதிபதியாக்கி, போராட்டச் செயற்பாட்டாளர்களை பகிரங்கமாக வேட்டையாடுவதன் பின்னணியில் இருப்பதும் ராஜபக்சக்களின் பெரமுன கட்சியேதான். கோத்தாபய ஜனாதிபதியாகவும், மஹிந்த பிரதமராகவும் இருந்தபோது, போராட்டக் காரர்களைக் கண்டு வெருண்டோடிய பெரமுனக் கட்சி, இப்போது ரணிலை ஜனாதிபதியாக்கிவிட்டு, தன்னுடைய வேட்டையாடும் படலத்தை தொடங்கியிருப்பது ஏன்? இத்தகைய வேட்டையாடுதலை, தமது கட்சியைச் சேர்ந்த கோத்தாபயவும், மஹிந்தவும் அதிகாரத்தில் இருந்தபோதே செய்திருக்கலாமே? ஏன் அப்போது செய்யவில்லை. அதற்கும் காரணம் இருக்கிறது. ஏற்கனவே கோத்தாபய, மஹிந்த மீது வெள்ளை வாகனக் கடத்தல்காரர்கள், போர்க் குற்றவாளிகள், தம் எதிராளிகளை முதலைக்கு இரையாக்குபவர்கள் என்ற அடையாளப்படுத்தல்கள் உண்டு. எனவே போராட்டக்காரர்கள் மீது கோத்தாபயவோ, மஹிந்தவோ தம் படைகளை ஏவியிருந்தால், மக்களின் கோபம் இன்னும் பன்மடங்கு அதிகரித்திருக்கும். அரசியல்வாதிகளின் வீடுகளுக்குப் பதிலாக அரசியல்வாதிகளையே நடுவீதியில் வைத்து எரிக்குமளவுக்கு உக்கிரமாக போராட்டம் மாறியிருக்கும். அதன் பின்னர் ராஜபக்சக்களோ, பொதுஜன பெரமுனவோ ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றுவதென்பது கனவிலும் நடக்கமுடியாத விடயமாக மாறியிருக்கும். எனவேதான் தமது தலைவர்கள் அதிகாரத்தில் இருந்தபோது, நடப்பதைக் கண்காணித்துக் கொண்டிருந்த பெரமுனக் கட்சி, இப்போது ரணிலை ஒரு பொம்மை ஜனாதிபதியாக்கிவிட்டு, தனது ஆட்டத்தை ஆரம்பித்திருக்கிறது. இதன்மூலம் இப்போது நடக்கும் அத்தனை அநீதிகளுக்கும் ரணிலைப் பாத்திரவாளியாக்குவதோடு, தமக்கு எதிராகச் செயற்பட்டவர்களை களத்தை விட்டு அகற்றும் கைங்கரியத்தையும் பெரமுன கனகச்சிதமாகச் செய்து கொண்டிருக்கிறது.

ஒரே கல்லில் பல மாங்காய்களை பெரமுன வீழ்த்த முயற்சிக்கிறது. மக்களின் கோபத்தை ரணில் பக்கம் மடைமாற்றிவிட்டு, மீண்டும் ராஜபக்ச யுகத்தை உண்டாக்குவதற்கான அத்தனை வேலைத் திட்டங்களும் முடுக்கி விடப்பட்டுள்ளன. அதன் ஒரு பகுதியாகத்தான் கோத்தாபய மீண்டும் நாடு திரும்ப இருக்கின்றார். மஹிந்தவை மீண்டும் பிரதமராக்குமாறு பொதுஜன பெரமுன வலியுறுத்தப் போவதாகவும் சொல்லப்படுகின்றது. கோத்தாபய நாடு திரும்பினாலோ, மஹிந்த மீண்டும் பிரதமரானாலோ அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து போராட இப்போது எவருமில்லை. ஏனெனில் அவர்களைத்தான் ரணிலை வைத்து அடக்கி –ஒடுக்கியாகிவிட்டதே. பொதுஜன பெரமுனவின் இத்தகைய காய்நகர்த்தல்களும், [illegible] தலையாட்டும் பொம்மையாக இருப்பதும் இலங்கை [illegible] தேசமாகவே எப்போதும் இருக்கப்போகின்றது என்பதையே சொல்லி நிற்கின்றன.

## நாளொரு நல்வார்த்தை

இவ்வுலக வாழ்க்கையில் சம்பாதித்துக்கொள்ள வேண்டிய குணங்கள் எல்லாவற்றிலும் மிகமிக உயர்ந்தது பொறுமை. -மகாகவி பாரதியார்.




## இலாபமீட்டும் நிறுவனங்களை தனியார் மயப்படுத்த முயற்சி

### ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

**கொழும்பு, ஓக. 22**

**இலாபமீட்டும் நிறுவனங்களை அரசாங்கம் தனியாரிடம் ஒப்படைப்பதற்கு முயற்சிக்கிறது. இதனை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்ப்பதுடன், இதற்கெதிராகப் போராட்டங்களையும் முன்னெடுக்குமென்று அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசு இலாபம் ஈட்டும் நிறுவனங்களைக்கூட தனியாரிடம் ஒப்படைக்க முயற்சிக்கின்றது. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு 10 ஆயிரத்து 741 மில்லியன் ரூபா இலாபத்தையும், சிறிலங்கா ரெலிக்கொம் 12 ஆயிரம் மில்லியன் ரூபா இலாபத்தையும் ஈட்டியுள்ளன. இவ்வாறான நிறுவனங்களை மறுசீரமைப்பதற்கு அவசியம் இல்லை. ஆனால், இவற்றை மறுசீரமைக்கவுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

நஷ்டத்தில் இயக்கும் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி முழுமையான ஆதரவு வழங்கும். ஆனால், இலாப மீட்டும் நிறுவனங்களில் கைவைப்பதை ஐக்கிய மக்கள் சக்தி கடுமையாக எதிர்க்கும் - என்றார். (ம)

## சபுகஸ்கந்த நிலையத்தின் பணிகள் மீண்டும் ஆரம்பம்



சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் நடவடிக்கைகள், நேற்றுமுன்தினம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஒரு லட்சம் மெற்றிக்தொன் கச்சா எண்ணெய் தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ள நிலையிலேயே எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடுத்த வாரம் மேலும் ஒரு லட்சத்து 20 ஆயிரம் மெற்றிக்தொன் கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்படலாமென்று எதிர்பார்க்கப்படுவதால் சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்புப் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். அநேகமாக அடுத்த 40 நாள்களுக்கு சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பணிகள் சீராக முன்னெடுக்கப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ம)

**நாளை** 23.08.2022
செவ்வாய்க்கிழமை ஆவணி 07
சுபநேரம் : 10.35 - 12.05
ராகுகாலம்: 03.05 - 04.35
ஏகாதசி விரதம்
நல்லூர் கந்தசுவாமி தெண்டாயுதபாணி உற்சவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** பணவரவு அதிகரிக்கும். குடும்பத் தேவைகளை நிறைவேற்று வீர்கள். நம்பிக்கையுடன் நினைத்த செயலில் முன்னேற்றம் காண்பீர்கள். முயற்சியில் வெற்றி உண்டாகும்.

**இடபம்:** உத்தியோகத்தில் இருந்து வந்த பிரச்சினை நீங்கும். நிம்மதி உண்டாகும். விருந்தினர் வருகையால் குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். இலா பம் ஏற்படும். பணவரவு உண்டு.

**மிதுனம்:** முக்கியமான செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெறுவீர்கள். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**கடகம்:** ஆதாயம் அதிகரிக்கும். வீட்டுக்குரிய நவீன சாதனங்களை வாங்குவீர்கள். லாபம் காண்பீர்கள். எதிர்கால நலன்கருதி திட்டமிடுவீர்கள். உத்தியோகத்தில் நெருக்கடி விலகும்.

**சிம்மம்:** எதிர்பார்த்த செய்தி வீடு தேடி வரும். தொழிலில் வெற்றி உண்டாகும். புதிய செயல்களுக்கு முயற்சிப்பீர்கள். பேச்சில் கவனம் தேவை. எதிர்பாராத லாபம் கிடைக்கும். ஆதரவு உண்டாகும்.

**கன்னி:** குழப்பங்கள் உண்டாகி திட்டமிட்ட செயல் முடியாமற் போகும். ஒருசிலரின் செயற்பாட்டால் மன அழுத்தம் அடைவீர்கள். கவனம் தேவை. புதியமுயற்சிதள்ளிப்போகும்.

**துலாம்:** திடீர்ச் செலவு ஏற்படும். வாகனப்பயணத்தில் எச்சரிக்கை தேவை. அலைச்சல் அதிகரிக்கும். செலவு செய்து சில வேலைகளை முடிப்பீர்கள். உடல் நிலையில் கவனம் தேவை.

**விருச்சிகம்:** தொழிலில் வெற்றி காண்பீர்கள். பணவரவால் குடும்பத் தில் மகிழ்ச்சி ஏற்படும். உங்கள் திட் டங்கள் நிறைவேறும். உத்தியோ கத்தில் யோகமான நாள். உடல்நிலை சீராகும்.

**தனுசு:** நேற்றைய செயல் ஒன்று இன்று நிறைவேறும். நண்பர்கள் அறி முகமாவார்கள். தொழிலில் திட்டமிட்ட செயல் ஒன்று வெற்றியாகும். பிள்ளை களின் முயற்சிகளுக்கு ஆதரவளிப்பீர்.

**மகரம்:** நேற்றுவரை இருந்த நெருக்கடி யிலிருந்து மீள்வீர்கள். புதிய பாதையில் பயணிப்பீர்கள். எதிர்பார்த்த இடங்க ளில் இருந்து உதவி கிடைக்கும் நாள். தடைப்பட்டிருந்த வேலைகள் முடியும்.

**கும்பம்:** எதிர்பார்க்காத செயலில் பிரச்சினை தலைதூக்கும். அமைதி தேவை. பணியிடத்தில் சங்கடம் தோன்றி மறையும். நட்புவட்டம் பெருகும். விழிப்பு ணர்வுடன் செயற்படுவீர்கள்.

**மீனம்:** தொழிலில் இன்று நம்பிக்கையுடன் செயற்பட்டு வெற்றி காண்பீர்கள். வீட்டுக்கான தேவைகளைப் பூர்த்தி செய்வீர்கள். யோகமான நாள். உங்கள் திறமை வெளிப்படும்.

# வடக்கு மாகாணத்தில் வேகமெடுக்கும் டெங்கு



**யாழ்ப்பாணம், ஓக. 22**

**வடமாகாணத்தில் டெங்கு நோயின் தாக்கம் அதிகரித்துள்ளது என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் தெரிவித்தார்.**

வடமாகாண சுகாதாரத் திணைக் களத்தில் நேற்றுமுன்தினம் இடம் பெற்ற ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

கடந்த 8 மாதங்களில் மட்டும் வடக்கு மாகாணத்தில் 2 ஆயிரத்து 772 பேர் டெங்கு நோயாளர்க ளாக அடையாளம் காணப்பட்டுள் ளனர். இந்த வருடம் அதிக அள விலான மழைவீழ்ச்சி ஏற்பட்டதே டெங்கு நோய் பரவுவதற்குக் கார ணமாக அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (எ-14,113)

# வென்மேரி அறக்கட்டளையால் தமிழ் ஆளுமைகளுக்கு விருது

யாழ்ப்பாணம், ஓக.22

வென்மேரி அறக்கட்டளையின் ஏற்பாட்டில் தமிழின் ஆற் றல்மிகு ஆளுமைகளை கௌரவிக்கும் விருதுகள் வழங்கும் விழா கடந்த புதன்கிழமை யாழ்ப்பாணம் நீரா வியடியிலுள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

பேராளுமை விருதுகள் பிரிவில் சுவாமி விபுலானந்த அடிகள் ஞாபகார்த்த விருது வேலாயுதபிள்ளை அருளா னந்தனுக்கும் தமிழ்த்தாத்தா கந்த முருகேசனார் ஞாப கார்த்த விருது பண்டிதர்.வீ.பரந்தாமனுக்கும் பேராசிரியர் க.கைலாசபதி ஞாபகார்த்த விருது ஐயாத்துரை சாந்த னுக்கும் மகாவித்துவான் பிரம்மஸ்ரீ வீரமணி ஐயர் ஞாப கார்த்த விருது முத்துக்குமாரு கோபாலகிருஷ்ணனுக்கும் ஓவியமேதை மாற்கு மாஸ்டர் ஞாபகார்த்த விழுது வைத் தீஸ்வரன் சிவசுப்பிரமணியனுக்கும் வழங்கப்பட்டது.

வாழ்நாள் சாதனையாளர் விருதுகள் பிரிவில் கவிஞர் இ.முருகையன் ஞாபகார்த்த விருது கவிஞர் சோ.பத்ம நாதனுக்கும் மொழியியல் பேராசிரியர் சுசீந்திரராஜா ஞாபகார்த்த விருது முனைவர் மனோன்மணி சண்முக தாஸுக்கும் புலவர்மணி ஆ.மு.செரிபுத்தீன் ஞாபகார்த்த விருது பாலமுனை பாறூக்குக்கும் குழந்தை மருத்துவ நிபுணர் மருத்துவக் கலாநிதி சிவபாதசுந்தரம் ஞாபகார்த்த விருது மருத்துவர் கலாநிதி கனகராஜா நந்தகுமாருக்கும் அமரர் தராகி சிவராம் ஞாபகார்த்த விருது பொன்னையா மாணிக்கவாசகமுக்கும் விளையாட்டுத்துறை நீச்சல் வீரர் அமரர் நவரட்ணசாமி ஞாபகார்த்த விருது மரியதாஸ் தொபியாஸுக்கும் அமரர் கலையரசு சொர்ணலிங்கம் ஞாபகார்த்த விருது இராசையா பீதாம்பரமுக்கும் குற மகள் வள்ளிநாயகி ஞாபகார்த்த விருது கோகிலா மகேந்திரனுக்கும் கவிஞர் பா.சத்தியசீலன் ஞாபகார்த்த விருது அருட்தந்தை செ.அன்புராசாவுக்கும் வழங்கப் பட்டது. (ச-20)

# யாழ்ப்பாணத்தில் அமைச்சர் பந்துல



யாழ்ப்பாணம், ஓக. 22

போக்குவரத்து மற்றும் நெடுஞ் சாலைகள் அமைச்சர் பந்துல குணவர்த்தன இரண்டு நாள் உத்தியோகபூர்வப் பயணமாக யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் சனிக்கிழமை வருகைதந்தார். தனது பய ணத்தின் ஒரு பகுதியாக யாழ்ப் பாணம் ரயில் நிலையத்துக்குச் சென்ற அமைச்சர், ரயில்வே நிலையப் பொறுப்பதி காரியுடன் கலந்துரையா டலில் ஈடுபட்டார். காங் கேசன்துறை - கொழும்பு ரயில் சேவையை மேம் படுத்துவது மற்றும் சேவைகளை அதிகரிப் பது தொடர்பில் இந்தச் சந்திப்பின்போது கலந் துரையாடப்பட்டது. (ம-27)

# சிறுவர் விழிப்புணர்வு உளசமூக செயற்றிட்டம்

மட்டக்களப்பு, ஓக.22

சிறுவர்களுக்கெதிராக இடம்பெறும் வன் முறைகள் மற்றும் துஷ்பிரயோகங்களை தடுக்கும் வகையில் நாடளாவிய ரீதி யில் விழிப்பூட்டும் சிறுவர் நல வேலைத் திட்டங்கள் சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார இராஜாங்க அமைச்சால் முன் னெடுக்கப்பட்டுள்ளன.

நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவை கள் திணைக்களத்தால் மட்டக்களப்பு கோறளைப்பற்று வடக்கு வாகரை பிர தேச செயலாளர் பிரிவின் மதுரங்கேணி குளம், குஞ்சங்குளம் ஆகிய கிராமங்களில் 'ஒரு நாளில் உன்னை மகிழ்விப்போம்' எனும் தொனிப்பொருளில் சிறுவர்களுக் கான உளசமூக செயற்றிட்டம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ச-150)

# மந்திரிமனையை சீரமைப்பதற்கு புலம்பெயர்ந்தோர் உதவி தேவை

## *யாழ். மரபுரிமை மையம் அவசர கோரிக்கை*

யாழ்ப்பாணம், ஓக. 22

யாழ்ப்பாணத்தில் உள்ள மந்திரிமனை இடிந்து விழும் நிலையில் காணப்படுவ தால் அதை மீள் சீரமைப்புச் செய்து சுற்றுலாத் தலமாக மாற்ற புலம் பெயர்ந் தவர்களும் செல்வந்தர்களும் உதவ முன்வரவேண்டும் என யாழ்ப்பாண மரபுரிமை மையம் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

யாழ். ஊடக அமையத்தில் கடந்த வியா ழக்கிழமை நடத்தப்பட்ட ஊடக சந்திப் பில் யாழ். மரபுரிமை மையம் சார்பில் அதன் தலைவர் வரலாற்றுத்துறை பேராசிரியர் ப.புஸ்பரட்ணம் இந்தக் கோரிக்கையை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் துள்ளதாவது:-

மந்திரிமனை[illegible] சுற்றுலாத்[illegible] தொல்லியல் திணைக்களம் எங்களுக்கு அனுச ரணை தந்திருக்கின்றது. இந்தப் பணியைச் செய்வதற்கு பல தடைகள் காணப்படுகின்றன. அந்தத் தடை களைத் தாண்டி தொல்லியல் திணைக் களத்தின் அனுமதியோடு சீரமைப்பு செய்யவுள்ளோம்.

மரபுரிமை சின்னங்களுடைய நில உரி மையாளர்கள் இதற்கு ஒத்துழைக்க வேண்டும். நில உரிமையாளர்கள் மர புரிமைச் சின்னங்களை அழித்துவிட்டு வேறு பணியை செய்ய முடியாது. மரபு ரிமைச் சின்னங்களுள்ள நிலங்களை அன்பளிப்பாகவோ அல்லது விலைக்கோ எங்களுக்குத் தந்தால் அதை நாங்கள் ஏற்றுக் கொள்வோம். சீரமைக்க வேண் டிய 300 க்கும் மேற்பட்ட தொல்லியல் சின்னங்கள் தொல்லியல் திணைக்க [illegible] அடையாளம் காணப்பட்டுள் [illegible] அரச அனுமதியோடு புலம் பெயர்ந்தவர்களிடமிருந்து நிதியைப் பெறுவதற்கு முயல்வதோடு செல்வந்தர் களும் இவ்வாறான பணிகளுக்கு உத வமுன்வர வேண்டும் - என்றார்.

இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்ட யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண் ணன் தெரிவித்ததாவது:-

மந்திரிமனை அமைந்துள்ள நிலத் தைக் கொள்வனவு செய்து முற்று முழு தாக புனரமைப்பு செய்யவேண்டுமா னால் 7 கோடி ரூபா செலவாகும் என்று மதிப்பிட்டுள்ளோம். மந்திரிமனை இடிந்து விழாதவாறு உடனடியாக அதைப் பாதுகாப்பதற்கான முன்னேற் பாடுகளை செய்வதற்கு 5 மில்லியன் ரூபா தேவைப்படுமென மதிப்பிட்டுள் ளோம். இதற்கான நிதி உதவிகளை விரைவாக எமக்கு வழங்க செல்வந்தர் களிடமும் புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் அமைப்புகளிடம் கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (எ-14,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் வீதிக்கு வரவேண்டும்!

## ரில்வின் சில்வா அழைப்பு

கொழும்பு, ஓக. 22

ஜெனிவாவில் இலங்கைக்கெதிரான பிரேரணை தயாராகிக் கொண்டிருக்கும் இந்தத் தருணத்தில் ரணில் அரசாங்கத்தின் அடக்கு முறைகளை வெளிக்கொணரும் முகமாக மக்கள் அனைவரும் வீதியில் இறங்கிப் போராட வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

ஜே.வி.பி. தலைமையகத்தில் அண்மையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குப் பதிலாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களை அச்சுறுத்தும் வகையில் நாட்டில் அடக்குமுறைகளைப் பிரயோகித்து ஜனநாயக விரோத செயற்பாடுகளில் ஈடுபடுகிறார்.

அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் மீது பொலிஸ் பலம் பிரயோகிக்கப்பட்டுள்ளது. எந்தத் தரப்பினரும் வீதியில் இறங்கி போராடினால் தாக்குதல்களை மேற்கொள்ள ஜனாதிபதி எச்சந்தர்ப்பத்திலும் தயாராகவுள்ளார்.

அரசாங்கத்தின் இவ்வாறான செயற்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். ரணில் விக்கிரமசிங்க இதேபாதையில் பயணிப்பாராயின் கோத்தபய ராஜபக்ச போன்று மக்களால் விரட்டியடிக்கப்படுவார். தற்போது எமது நாடு ஜனநாயகம் அற்ற , அரசமைப்பால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகளை அழித்துக் கொண்டிருக்கும் நாடாக மாற்றமடைந்து கொண்டிருக்கிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடைபெறவுள்ள இவ்வேளையில் அரசாங்கத்தின் அடக்குமுறைகளுக்கு எதிராக மக்கள் அனைவரும் வீதிக்கிறங்கி குரல்கொடுக்க வேண்டும் - என்றார். (ச-இ)

# நான்காவது டோஸை ஏற்றாவிடில் ஆபத்து!

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, ஓக.22

கொரோனாத் தடுப்பூசியின் நான்காவது டோஸை பொதுமக்கள் விரைவில் செலுத்திக்கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு கேட்டுக்கொண்டுள்ளது. நான்காவது தடுப்பூசி செலுத்திக் கொண்டவர்களுக்கு பக்க விளைவுகள் ஏதும் ஏற்பட்டமை இதுவரை பதிவாகவில்லை எனவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் இதுவரை மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மக்களே நான்காவது தடுப்பூசி செலுத்தி கொண்டுள்ளனர். மூன்றாவது தடுப்பூசியை செலுத்திக் கொள்ளாதவர்கள் தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும்.

நாளாந்தம் 100 கொவிட் தொற்றாளர்கள் தற்போது இனங்காணப்படுகின்றனர். மூன்றாவது மற்றும் நான்காவது தடுப்பூசியை செலுத்திக்கொள்ளாவிட்டால் இந்நிலைமை மோசமடையும் - என்றார். (எ-இ)

# மின்சார சபையில் சீரமைப்பு தேவை!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுத் தலைவர் தெரிவிப்பு

இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்பட வேண்டும் என பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த வேலைத்திட்டத்துக்கு, பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது:

கணக்கியல், முகாமைத்துவம், இயக்கம் மற்றும் பரிமாற்றம் முதலான பணிகளை, மின்சார சபையில் உள்ள பொறியியலாளர்களே செய்கின்றனர். தொழில்நுட்பவியலாளர்கள், தொழில்நுட்ப பணியையே செய்ய வேண்டும். இதற்கு சிறந்த முகாமைத்துவ குழு அவசியமாகும் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# பாதுகாப்புப் பிரதானிகளுடன் ஜனாதிபதி ரணில் சந்திப்பு

கொழும்பு, ஓக. 22

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் பாதுகாப்புப் பிரிவின் பிரதானிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஜனாதிபதி அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகவும் முப்படைகளின் தளபதியாகவும் பதவியேற்றதன் பின்னர் மரியாதை நிமித்தம் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது. சந்திப்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலர் ஜெனரல் கமால் குணரத்ன, பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வா உள்ளிட்ட பாதுகாப்பு அதிகாரிகள் பலர் கலந்துகொண்டு ஜனாதிபதிக்கு நினைவுப்பரிசுகளையும் வழங்கினர். (எ-14-22)




கார் விற்பனைக்கு

ALTO (K10)
2015 Model, Silver
Auto, 3900000

077 911 8101



மாநகரசபை, யாழ்ப்பாணம்

**நல்லூர் உற்சவ கால தற்காலிக கடைகளுக்கான பிணைப்பண வைப்பு மீளளிப்பு 2014 - 2017**

நல்லூர் உற்சவ கால தற்காலிக கடைகளுக்காக செலுத்தப்பட்ட பிணைப்பணம் ஆனது 2014 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை காலமும் கோரப்படாமல் உள்ளது. 2014 தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையான மீள பெற்றுக்கொள்ளப்படாத பிணைப் பணத்தினை வைப்பு கணக்கில் இருந்து வருமான கணக்கிற்கு மாற்றம் செய்ய இருப்பதால் இதுவரை காலமும் பிணைப்பணத்தினை பெற்றுக்கொள்ள தவறியவர்கள் தங்களுடைய பிணைப்பண வைப்பு பற்றுச்சீட்டுடன் மாநகரசபை முன்னரங்கு அலுவலகத்தில் 22.09.2022 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும். தவறும் பட்சத்தில் உரிமை கோரப்படாத பிணைப்பண வைப்பானது வருமானத்திற்கு மாற்றப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

முதல்வர்
மாநகரசபை, யாழ்ப்பாணம்

(CR 37090) (3/6)



**1ஆம் ஆண்டு நினைவில்**



தோற்றம் 24 – 10 – 1951

மறைவு 03 – 09 – 2021

அமரர் **சின்னத்தம்பி ஈஸ்வரலிங்கம்**

அன்பாய் பழகும் குணம்
ஆதரிக்கும் நல்ல மனம்
சேவை செய்யும் நல்ல குணம் கொண்ட
அப்பாவே அனைவரும் போற்ற வாழ்ந்து காட்டினீர்கள்
நாங்கள் வையத்துள் வாழ்வாங்கு வாழ - ஓர்
ஒளிமயமான எதிர்காலத்தைக் காட்டிவிட்டு
அணைந்தும் அணையாத தீபமாய் என்றும் எங்களின்
இதயத்தில் சுடர்விட்டு கொண்டிருக்கும்
குலவிளக்கே அப்பா! நீங்கள் எம்மை விட்டுப்
பிரிந்து ஓராண்டு சென்றாலும் உங்கள் நினைவுகள்
என்றும் எங்களை விட்டுப் பிரியாது.

விளையாட்டரங்க வீதி,
கல்வியங்காடு.

நினைவுகளுடன்
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

(CS 20413) (3/6)



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**மரண அறிவித்தல்**



தோற்றம் 31.10.1945

மறைவு 20.08.2022

**செல்வரத்தினம் நிர்மலாதேவி**

பூநாறி மரத்தடியைப் பிறப்பிடமாகவும். காரைக்காட்டுலேனை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் நிர்மலாதேவி அவர்கள் கடந்த (20.08.2022) சனிக்கிழமை காலமானார். அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணசாமிப்பத்தர் - மங்களம்மா தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்ற மயில்வாகனம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும். காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும். கலாமணிதேவி. காலஞ்சென்றவர்களான பகவதி. பத்மநாதன் மற்றும் கணேஸ்வரி. சிவகுருநாதன். செல்வநாதன். சாந்த சற்குணநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும். காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி. இந்திராணி. செல்வராணி. யோகேஸ்வரி. நவரத்தினம் மற்றும் கிருஸ்ணமூர்த்தி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.08.2022 ) திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும். ஏற்றுக் கொள்ளவும்.

தொ,பேசி : 077 077 5933
076 036 5172

தகவல்:
குடும்பத்தினர்

(CS 20428) (3/6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்(வ-து)

## பதவி வெற்றிடம்

மேற்படி சங்கத்தில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு ஆள்சேர்ப்புச் செய்வதற்காக தகைமையுள்ளவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பதவி:- காசாளர் (வெற்றிடம் (1)**

குறியீட்டு இல :- 306/13

சம்பளத்திட்டம் :- 16365-140x10) -- 150x10 - 19265

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்**

அ) கூட்டுறவு ஊழியர் 14 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு ஊழியர் 15 ஆவது சம்பளத்திட்ட பதவியில் ஆகக் குறைந்தது 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

*அல்லது*

ஆ) கூட்டுறவு பணியாளர் (சாதராணம்) சான்றிதழ் அல்லது க.பொ.த (சாதராணம்) தரப்பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாது கணிதம் மற்றும் சிங்களம் அல்லது தமிழ்மொழி உட்பட 03 பாடங்களில் திறமைச்சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி.

**ஏனைய விபரங்கள்**

01. வயதெல்லை 18-45 (சங்கப்பணியாளர்களுக்கு இவ் வயதெல்லை பொருத்தமற்றது)
02. இப்பதவிக்குரிய அடிப்படைச் சம்பளத்தை விட மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் சுற்று நிருபத்திற்கமைய இதர படிகளும் காலத்துக்காலம் அங்கீகரிக்கப்படும் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.
03. குறித்த பதவிக்கு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்கத்தினால் கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
04. ஏற்கனவே கூட்டுறவு சங்கம் ஒன்றில் கடமையாற்றும் ஊழியர் அச்சங்கத்தின் ஊடாகவே விண்ணப்பித்தல் வேண்டும்.
05. தகைமையற்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

மேற்படி பதவிக்கு தங்களினால் சுயமாக தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தில் விண்ணப்பிக்கவும் அத்துடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் விண்ணப்பிக்கும் உரிய பதவியைக் குறிப்பிட்டு **தலைவர், யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) இல.330 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ 07.09.2022 ஆம் திகதிக்கு** முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தலைவர்**

**22.08.2022**

**யாழ்ப்பாணம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம்.**

(CR 37094) (3/6)

# 1ஆம் ஆண்டு நினைவு நாள்

பிறப்பு 15 – 03 – 1947



இறப்பு 02 – 09 – 2021

## அமரர் தம்பையா குலவீரசிங்கம்

**திதி : ஏகாதசி (22.08.2022)**

ஆண்டு ஒன்று சென்றாலும் நான்
ஆறாத துயரோடு வாழ்கின்றேன் - தம்பி
நீங்கள் இல்லை என்று எண்ண
எம் மனம் மறுக்கின்றது - அண்ணா
எங்கள் வாழ்வை உயர்த்தி
நிறைவான வாழ்வு தந்தீரே - மூத்தமாமா
ஒவ்வொரு வினாடியும் ஆறவில்லை எம் துயரம்
அழியாத பாசமிகு நினைவுகளுடன்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.**

**விச்சினாவளவு,**
**அல்வாய் மேற்கு, அல்வாய்.**
**திக்கம்**

**குடும்பத்தினர்**

(CS 921 ) (3/6)

### அமைச்சு இல்லாமையால் பெரமுனவினர் அதிருப்தி!

*பஸிலிடம் முறையிட முடிவு*


சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் இராஜாங்க அமைச்சர்கள் குழுவொன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தில் பதவிகள் கிடைக்காமையால் ஏமாற்றமடைந்துள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நாட்டுக்கு வருவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ள நிலையில், குறித்த குழுவினர் சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவை எதிர்வரும் வெள்ளிக்கிழமை சந்தித்து தமது குறைகளை முன்வைக்க தயாராகி இருப்பதாகவும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ம-14,இ)

# 31ஆம் நாள் அந்தியேட்டி வீட்டுக் கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 29 – 06 – 1944



மறைவு 23 – 07 – 2022

கடந்த (23.07.2022) சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த
எங்கள் அன்புத் தெய்வம்

## அமரர் வயிரவி செல்லத்துரை

(ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகர்)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (22.08.2022) திங்கட் கிழமை காலை 6.30 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையிலும் வீட்டுக்கிருத்திய நிகழ்வானது நாளை மறுதினம் (24.08.2022) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் மரணச் செய்தியறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும், ஆறுதல் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**வேரவல்,**
**இளவாலை வடக்கு, இளவாலை.**

**குடும்பத்தினர்**

(CS 20427 ) (3/6)

# 28ஆம் ஆண்டு நினைவஞ்சலி





**திருமதி நவரத்தினம் விசாலாட்சி [ரத்தினம்]**

தோற்றம் : 18.02.1947

**செல்வி நவரத்தினம் ஜெயசுதா [ரதி]**

தோற்றம் : 23.04.1970

மறைவு 01.09.1994

**திதி : ஆவணி அபரபட்ச ஏகாதசி (22.08.2022)**

நீங்கள் பறந்து போய் இருபத்தெட்டு
ஆண்டுகள் கரைந்த போதும்
அழியாத ஓவியமாய்
என்றும் எம் நெஞ்சில் வாழ்ந்து வரும்
உங்கள் நினைவுகள்

**உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்**

**உங்கள்நினைவுகளுடன்**
**மக்கள், சகோதரர்கள்**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்**
**ஊர் எல்லை வீதி, மீசாலை வடக்கு, மீசாலை.**

(CS 20350) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுறுத்திப் பதவியை தக்கவைக்க முடியாது!

ரணிலுக்கு அநுர குமார எச்சரிக்கை
தேர்தலை நடத்துமாறும் கோரிக்கை

**கொழும்பு, ஓக. 22**

**ஒரு நாட்டைப் பயமுறுத்தி ரணில் விக்கிரமசிங்கவால் தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

அரசாங்கத்துக்கு எதிராக நேற்றுமுன்தினம் ஜே.வி.பி. போராட்டத்தில் ஈடுபட்டது. இந்தப் போராட்டத்தின் பின்னர் கருத்துத் தெரிவிக்கையிலேயே அநுர இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

'இன்று நம் நாட்டில் மக்கள் ஆணை இல்லாத அரசாங்கம், ஆணை இல்லாத தலைவர் என்ற முறையே நடைமுறையில் உள்ளதை நாம் அறிவோம். இவர்கள், எந்தத் திட்டமும் தொலை நோக்குப் பார்வையும் இல்லாத ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, இவர்கள் எமது நாட்டின் பொருளாதாரத்தை அழித்த குழுவாகும். எனவே, அந்த ஆட்சியை அகற்ற முன்வருவதற்கு இந்த நாட்டு மக்களுக்கு நியாயமான உரிமை உள்ளது.

சமீப காலங்களில், நம் அனைவருக்கும் உத்வேகத்தையும் தூண்டுதலையும் கொண்டு வந்த மாபெரும் மக்கள் எழுச்சி ஏற்பட்டது. மக்களுக்கான பிரச்சினைகளை நீர்க்கும் மக்கள் ஆட்சிக்காக நாடு முழுவதும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த மக்கள் குழுக்கள் வீதியில் இறங்கி போராடினர். கடந்த இரண்டு அல்லது மூன்று மாதங்களில், இலங்கையில் அண்மைக்கால வரலாற்றில் மிகப்பெரிய மக்கள் அணிதிரட்டலைக் கண்டோம். அந்தப் போராட்டம் ராஜபக்ச முகாமை அகற்றுவதில் வெற்றி பெற்றது. ஆனால், எஞ்சியிருந்த ராஜபக்ச முகாம் புதிய தலையை நிறுவியி ருக்கிறது.

அடுத்த வாரம் ஏராளமான அமைச்சர்கள் பதவியேற்கவுள்ளனர். கூடுதல் பதவிகளை வழங்கி மக்களின் கோடிக்கணக்கான பணத்தை வீணடிப்பதில் மும்முரமாகவுள்ளனர். தனக்கும் தன்னைச் சுற்றி யுள்ளவர்களுக்கும் ரணில் ஆசி வழங்கி வருகிறார். நாட்டை பயமுறுத்தி, சமூக ஆர்வலர்களை அடக்கி, அரசியல் ஆர்வலர்களை அடக்கி, கதிரையை ரணில் விக்கிரமசிங்க வால் பாதுகாக்க முடியுமா? ஒருபோதும் இல்லை - என்றார். (ம)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 15 . 12 . 1942



இறைவன் அடியில் 22 . 08 . 2021

ஞானசிங்கம் இராஜேஸ்வரி

தாய் தந்தை மடியினிலே இருபது வருடம். கொண்டவன்
மடியினிலே அறுபது வருடம் ஆண்டு ஒன்று ஆனாலும்
மறப்பேனோ உன் உறவை.
என் துணைக்கு மகனொன்று மகளொன்று விட்டுச் சென்றாய்
மகளென்று மருமகளையும் தந்து சென்றாய் உன்னருமை
பேர்த்திமார் ஐவரையும் தந்து சென்றாய்! அதுவும்
போதாதென்று பூட்டப்பிள்ளைகள் மூவரையும் தந்து சென்றீர்!
ஆனாலும், மறப்பேனோ உன் உறவை
அனுதினம் செபமாலை ஓதுகின்றேன் திருப்பலியும்
ஒப்புக்கொடுக்கின்றேன் உன் ஆன்ம இளைப்பாற்றிக்காக

53/3 மவுண்காமல் வீதி,
யாழ்ப்பாணம்

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள்,
மருமகள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்
077 662 1999


## பெரமுன வுக்கு தற்போதும் 69 இலட்சம் மக்கள் ஆதரவாம்

*சனத் நிஷ ந்த எம்.பி. கண்டுபிடிப்பு*

கொழும்பு, ஓக. 22

சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு தற்போதும் 69 இலட்சம் மக்களின் ஆதரவு உள்ளது என்று பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன வின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்சவுக்கும், பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்களுக்குமிடையில் கட்சி தலைமையகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப் பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் அனைத்து அரசியல் கட்சிகளையும் ஒன்றிணைத்து சர்வகட்சி அரசாங்கத்தை ஸ்தாபிக்க முடியாவிடின் தேசிய அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்துள்ளோம்.

தேசிய அரசாங்கத்தில் இணைந்துகொள்ளும் தரப்பினருக்கு அமைச்சுப் பதவிகளில் முன்னுரிமையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பதவிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு மிகுதியாக அமைச்சுப் பதவிகளை எமக்கு வழங்கினால் அதை ஏற்றுக்கொள்வோம். சிறிலங்கா பொதுஜன பெரமுனவுக்கு 69 லட்சம் மக்களின் ஆணை இன்றுமுள்ளது. எனவே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காண ஜனாதிபதிக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்குவோம்- என்றார். (ம-14,இ)

## தடைநீக்கப் பட்டியலை வெளியிடல் முறையல்ல

*உலகத் தமிழர் பேரவை சுட்டிக்காட்டு*

கொழும்பு, ஓக. 22

இலங்கை அரசாங்கம், தடைநீக்கம் தொடர்பில் தனிநபர்கள், நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் சார் பட்டியலை வெளியிடும் செயல்முறை முறையற்றதும் ஐக்கிய நாடுகள் சபையின் ஒழுங்குமுறையை முற்றிலும் துஷ்பிரயோகம் செய்வதுமாகும் -இவ்வாறு குற்றஞ்சாட்டியுள்ளது உலகத் தமிழர் பேரவை.

இதுதொடர்பில் அந்தப் பேரவை தெரிவித்ததாவது:-

2014ஆம் ஆண்டு முதல் பேச்சு சுதந்திரம் மற்றும் கருத்து வேறுபாடுகளை நசுக்குவதற்கும் மனித உரிமை பாதுகாவலர்களை அச்சுறுத்துவதற்கும் அரசாங்கத்தால் தவறாக இந்தப் பட்டியல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. 2022ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட வர்த்த மானியில் பல தமிழ் மற்றும் முஸ்லிம் அமைப்புக்கள், தனிநபர்கள் இன்னும் புதுப்பிக்கப்பட்ட பட்டியலில் இருப்பது ஏமாற்றமளிக்கிறது.

அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவையில் இலங்கையின் மனித உரிமைகள் பதிவு மீளாய்வு செய்யப்படவுள்ள நிலையில், இலங்கையின் நற்சான்றிதழ்களை வலுப்படுத்துவதற்காகவே இந்தத் தடைப்பட்டியல் நீக்கப்பட்டது என்பதில் சந்தேகமில்லை - என்றுள்ளது. (ம-14,இ)

# முட்டைக்கு நிர்ணய விலையால் உற்பத்தியாளர் விலகும் ஆபத்து

*இலங்கை கோழிப்பண்ணையாளர் சங்கம் எச்சரிக்கை*

கொழும்பு, ஓக. 22

முட்டைகளுக்கு நிர்ணய விலை அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், அந்த விலை உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியாகாது என்றும், உற்பத்திகளை குறைமதிப்புக்கு உட்படுத்தக்கூடும் எனவும் இதனால் உற்பத்தியாளர்கள் துறைசார் நடவடிக்கைகளில் இருந்து விலகக் கூடிய ஆபத்துள்ளது எனவும் இலங்கைக் கோழிப்பண்ணையாளர் சங்கம் எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட நிர்ணய விலையின்படி வெள்ளை முட்டையின் அதிகபட்ச சில்லறை விலை 43 ரூபாவாகவும், சிவப்புநிற முட்டையின் விலை 45 ரூபாவாகவும் விற்பனை செய்யப்பட வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இலங்கையின் அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக கால்நடைத் தீவன இறக்குமதி கடுமையாகப் பாதிப்படைந்துள்ளது. உச்ச விலைகொடுத்தே தீவனங்களை கொள்வனவு செய்ய வேண்டியிருப்பதுடன், தீவனங்களை முன்னர் போன்று சீராக வழங்க முடியாமலுள்ளது. இதனால் முட்டை மற்றும் இறைச்சி உற்பத்தி குறைந்துள்ளது. இதன் காரணமாக சிறிய மற்றும் நடுத்தர பண்ணை உரிமையாளர்களில் 50 வீதத்தினர் அதிகரித்த உற்பத்தி செலவு மற்றும் குறைந்த வருமானம் காரணமாக தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர். இந்த நிலையில் முட்டைக்கு அதிகபட்ச சில்லறை விலையை விதிப்பது தற்போது சாதகமான தீர்வாகாது- என்றார். (ம-14,இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கோழி...

இது தொடர்பான இறுதித் தீர்மானம் இந்த வாரத்தில் எட்டப்படும் என வணிக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆயினும், கோழிப் பண்ணையாளர்கள் விலையைக் குறைக்க ஒப்புக்கொண்டால், கட்டுப்பாட்டு விலை அவசியமில்லை.

கடந்த இரண்டு வாரங்களில் பல அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. இதன்படி, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம், மிளகாய் மற்றும் பல நுகர்வுப் பொருள்களின் மொத்த விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கான சில்லறை விலையும் எதிர்வரும் நாள்களில் குறையும் -என்றார். (அ-ஓ-இ)

## நல்லாட்சியில்...

இணைந்து, நாட்டை இருந்ததை விட சிறந்த இடத்துக்கு கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது - இவ்வாறு முன்னாள் அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அநுராதபுரம் மாவட்டத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான துமிந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையில் நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திச் சபைக் கூட்டத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று எனக்கு மிகவும் மகிழ்ச்சியான நாள். பல முக்கியமான அரசியல் கட்சிகளின் உறுப்பினர்கள் இன்று ஒன்றாக இருக்கிறார்கள். 2015 இல் இருந்து இந்த நாளுக்காகத் காத்திருக்கிறோம். ஆனால் அன்று அதைச் சரியாகச் செய்ய முடியவில்லை. அப்போது சிறிலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரண்டு பிரதான கட்சிகளும் இணைந்து நாட்டை கட்டியெழுப்பும் ஆலோசனையை முன்வைத்த போதிலும் துரதிர்ஷ்டவசமாக அதனை நாட்டு மக்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவில்லை.

ஆனால் விதியின் விளையாட்டால் சிறிலங்கா சுதந்திரக் கட்சியை தாய்க்கட்சியாகக் கொண்ட சிறிலங்கா பொதுஜன பெரமுன இன்று உங்களை ஜனாதிபதியாக நியமித்துள்ளது. நல்லவைகள் சிறந்த நேரத்தில் நடக்காவிட்டாலும், இன்று ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு, முக்கியமான அரசியல் நீரோட்டங்கள் ஒன்றாக இணைந்து, நாட்டை இருந்ததை விட சிறந்த இடத்துக்கு கொண்டு செல்லும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

நாம் வரலாறு பற்றி பேசிப் பயனில்லை. வரலாற்றை மறந்து அனைவரும் ஒன்றிணைந்து இந்த நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும். எத்தகைய தடைகள் வந்தாலும் நாடாளுமன்றத்தில் உங்களை வெற்றி பெறச்செய்தோம். இப்போது இந்த நாட்டைக் கட்டியெழுப்பவில்லையென்றால், வேறொரு நாள் கிடைக்காது. இதற்கு முன்னர் இந்த நாட்டைக் கட்டியெழுப்பக் கிடைத்த இரண்டு சந்தர்ப்பங்களை இழந்துள்ளோம். அது சுனாமிப் பேரழிவும், போர் வெற்றியுமே. இதுவே நம் வாழ்நாளில் கிடைத்த கடைசி வாய்ப்பு.

உங்களுக்கு நல்ல அனுபவம் இருக்கிறது. நாங்கள் உங்களைக் கேலி செய்தபோதும், எதிர்க்கட்சியில் சேர்ந்து நீங்கள் கடினமாகப் பணியாற்றினீர்கள். அதனால்தான் ஒரு பிரச்சினை வரும் நேரத்தில், மற்றத் தலைவர்கள் புத்தகங்களைப் புரட்டும்போது, அந்தப் பிரச்சினைகளுக்கும், எந்தக் கேள்விக்கும் உங்களிடம் பதில் இருக்கின்றது.

போராட்டத்தின் மூலம் நாட்டில் மாற்றம் ஏற்படும் என நம்பிய இளைஞர் கூட்டம் இருந்தது. அரசியல் மாற்றம் மட்டுமன்றி அனைத்து துறைகளிலும் மாற்றத்தை எதிர்பார்த்தனர். இந்த மாற்றத்தை நாடே கோரியது. நாங்கள் அரசியல் ரீதியாகப் பிளவுபட்டிருந்ததால் இதை முன்னரே செய்ய முடியவில்லை - என்றார். (அ-ஓ-இ)

## ஒரு தொகுதி...

மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார் - இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்தார்.

தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை விவகாரம் தொடர்பில் கருத்துரைக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதியுடனும் என்னுடனும் பேச்சு நடத்தியுள்ளனர். அவர்களின் நியாயமான கோரிக்கை தொடர்பில் பரிசீலித்து வருகின்றோம்.

அதற்கமைய முதற்கட்டமாகக் குறிப்பிட்ட சில தமிழ் அரசியல்கைதிகளுக்கு விடுதலை கிடைக்கும். அதன்பின்னர் ஏனைய தமிழ் அரசியல்கைதிகளுக்கும் மன்னிப்பு வழங்கி விடுவிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுப்பார்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். அவற்றுள் அரசியல்கைதிகள் விவகாரமும் ஒன்று. இதனைக் கருத்திற்கொண்டு அரசு செயற்படும் - என்றார். (அ-ஓ-22)


## புனருத்தாரணம்...

தேரின் வெள்ளோட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை காலை 7 மணிக்கு இடம்பெறவுள்ளது.

நல்லூர்க்கோயிலில் முன்னர் இருந்த தேர் பழுதடைந்த நிலையில் இருந்த காரணத்தால், அதன் அபாயத்தை உணர்ந்த சண்முகதாஸ் மாப்பாண முதலியார், புதிய தேர் ஒன்றை 1964 ஆம் ஆண்டு உருவாக்கினார். அந்தத் தேரே மீண்டும் புனருத்தாரணத் திருப்பணி நிறைவுற்று நாளை வெள்ளோட்டம் காணவுள்ளது. (அ-ஓ-இ)

# மரண அறிவித்தல்

தோற்றம் 27 - 09 - 1966



மறைவு 20 - 08 - 2022

## சதாசிவம் சற்குணலிங்கம்

(S.S றேடர்ஸ், ஹற்றன்)

கோண்டாவில் கிழக்கு பழனியாண்டவர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கு, ஹற்றன் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் சற்குணலிங்கம் அவர்கள் (20.08.2022) சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சதாசிவம்-பூபதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை (தாமோதரா ஸ்ரோர்ஸ் - மன்னார்), யோகம்மா தம்பதியரின் மருமகனும் சிவகௌரி (கௌரி) அவர்களின் அன்புக் கணவரும் சங்கவி (3ஆம் வருட மாணவி, மருத்துவ பீடம்-யாழ்.பல்கலைக்கழகம்), துஷ்யந் (மாணவர் - பல்கலைக்கல்லூரி யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் அமரர் சிவலிங்கம் (ஆடிட்டர் - ஹற்றன்), சந்திரவதனா (ஆனமடு), தயாளமலர் (கனடா), சுந்தரலிங்கம் (கனடா), தயாநிதி (தேவகி - இணுவில்), கருணா (கனடா), ஜெகதீஸ்வரி (ஹற்றன்), சிவனேஸ்வரலிங்கம் (கனடா), உமா (கனடா) ஆகியோரின் இளைய சகோதரரும், அமரர் மனோரஞ்சினி, அமரர் சிவபாலசிங்கம், மகாலிங்கம், புஸ்பமலர், பரமேஸ்வரன் (கிளி-இணுவில்), ஜெயபாலசிங்கம், கருணாகரன், சுகந்தி, ஆனந்தராஜா, சுந்தரேஸ்வரி (மாம்பழம்), சிவயோகநாதன் (லண்டன்), சிவகுமாரன் (நோர்வே), சிவானந்தன் (ஆசிரியர் - ஹற்றன் ஹைலன்ட்ஸ் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (23.08.2022) செவ்வாய்க்கிழமை மு.ப 10.30 மணியளவில் தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக நண்பகல் 12.00 மணியளவில் தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தாவடி வடக்கு

077 044 7067
077 226 9873

# மரண அறிவித்தல்

## அமரர் விக்ரர் செல்வநாயகி- யாக்கோப்பு



மண்ணில் 12.01.1953

விண்ணில் 21.08.2022

மிருசுவில் பழையவாய்க்காலை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அமரர் விக்ரர் செல்வநாயகி யாக்கோப்பு நேற்று (21.08.2022) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் யாக்கோப்புவின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்றவர்களான தேவசகாயம் றோசம்மா தம்பதிகளின் அன்புப்புதல்வியும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் எலிசபேத் ஆகியோரின் பாசமிகு மருமகளும் மரியராசா, அருட்சகோதரிகள் ஜெயப்பிரகாசி, மேரிபத்தில்தெஸ் (செபமாலைக்கன்னியர் சபை) யேற்றூட் கிருபைவரம் (ஓய்வுநிலை ஆசிரியை) காலஞ்சென்ற அன்ரன் அரிய பூசணம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் பிலசிதம்மா தவரஞ்சிதம் (ஓய்வுநிலை ஆசிரியை) அன்ரனி பெர்னான்டோ ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இரங்கல் திருப்பலி இன்று (22.08.2022) திங்கட்கிழமை பி.ப.3 மணிக்கு பழைய வாய்க்கால் புனித வேளாங்கண்ணி அன்னை ஆலயத்தில் நிறைவேற்றப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்: குடும்பத்தினர்

# கண்ணீர் அஞ்சலி



20.08.2022 சனிக்கிழமை அன்று

கனடாவில் காலமான

## சண்முகம் முத்துலிங்கம்

அவர்களின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மானிப்பாய்.

பிரிவால் துயருறும் சிவஞானம் குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரமேஸ்வரன் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழா

யாழ்ப்பாணம், ஒக. 22

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி விழா நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 6 மணிக்கு சங்காபிஷேகத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து ஸ்ரீலஸ்ரீ அறுமுகநாவலர், சேர்.பொன்.இராமநாதன் ஆகியோரின் திருவுருவச்சிலைகள் திறக்கப்படவுள்ளன. அதன்பின்னர் கலைஞர்களைக் கௌரவித்தல், மஞ்சத் திருவுலா போன்றன இடம்பெறும் என்று பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர் சபை அறிவித்துள்ளது. (ம-14)

## நாட்டை....

அநுராதபுரம் கோல்டன் மெங்கோ மண்டபத்தில் நேற்று நடைபெற்ற அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்திச் சபையில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

**சுற்றுலாவிகளை தக்கவைக்கவேண்டும்**

அநுராதபுரம் மாவட்டத்தைப் பார்க்கும் போது, இந்த மாகாணத்தில் இன்னும் பலவற்றைச் செய்ய வேண்டும் என்று உணர்கிறேன். அநுராதபுரத்தையும் கண்டியையும் இந்தநாட்டின் முக்கியமான சுற்றுலா மையமாக மாற்ற வேண்டும். இந்த மாகாணத்துக்கு வரும் சுற்றுலாப்பயணிகள் அரை நாளில் தங்கள் பயணத்தை முடித்துக்கொள்கின்றனர். நைல் பள்ளத்தாக்கிலிருந்து பண்டைய எகிப்திய ராஜ்ஜியங்களைப் பார்வையிட ஒரு வார காலம் ஆகும். ஆனால், இந்தப் பழமையான இடத்துக்கு வந்து அரை மணி நேரம் கூட சுற்றுலாவிகள் கழிப்பதில்லை. நாம் இதை மாற்ற வேண்டும். அநுராதபுரம் ஒரு வகையில் புனித நகரம். மறுபுறம், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வரலாற்று நகரமாக மாற்றப்படவேண்டும். பிரான்ஸ் அல்லது வேறு நாட்டிலிருந்து ஆலோசகர்களை வரவழைத்து, இந்த அநுராதபுர நகரத்தை, கலாசார மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க சுற்றுலா மையமாக எவ்வாறு மாற்றுவது என்பது பற்றிப் பேசுவோம்.

**வீழ்ந்த பொருளாதாரத்தை நிமிர்த்துவோம்**

இன்று நாட்டு மக்கள் மிகுந்த அழுத்தத்தில் உள்ளனர். வரலாற்றில் இத்தகையதொரு அழுத்தம் ஏற்பட்டதில்லை. அந்த நிலையிலிருந்து நாம் மீள வேண்டும். கடந்த வருடத்தை விட நமது பொருளாதாரம் 8 சதவீதத்தால் குறையும். இது வேகமாக இடம்பெறுகிறது. அதன் பிரதிபலனை அனைவரும் அனுபவிக்க வேண்டிவரும். இவ்வாறு நிகழும்போது, நாம் அதிலிருந்து எவ்வாறு மீண்டு வருவது என்று சிந்திக்க வேண்டும். இந்தப் பொருளாதார வளர்ச்சியை எவ்வாறு முன்னெடுப்பது என்று பார்க்கவேண்டும். நாம் இந்தப் பெரும்போகத்தில் விவசாயத்தை வெற்றிகரமாகச் செய்தால் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பமுடியும். பெரும்போகத்துக்குத் தேவையான உரங்களை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். அதற்கான உதவிகள் தற்போது கிடைத்துள்ளன. அதேபோன்று உர மானியமும் வழங்கப்படுகிறது. தேவையான விதைகள் வழங்கப்படும். விவசாய நடவடிக்கைகளுக்குத் தேவையான அளவு எரிபொருள் வழங்கும் பணி நடந்து வருகிறது. பெரும்போகத்தை மிகவும் வெற்றிகரமாக மாற்ற விரும்புகிறோம். அப்போதுதான் இந்தப் பொருளாதார அழுத்தத்தைக் குறைக்க முடியும்.

அடுத்த வருடம் இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்க முடியுமென எதிர்பார்க்கிறோம். ஏற்றுமதித் துறையில் இருந்து இப்போது எமக்கு பணம் கிடைக்கிறது. ரூபாவின் பெறுமதி நிலையாகும் போது மீண்டும் மத்திய கிழக்கு நாடுகளின் பணம் நேரடியாக இலங்கைக்கு வந்து சேரும்.

**வெளியாரின் உதவி - முடிவு**

எனவே, இந்த நடவடிக்கைகளின் ஆரம்பம் பெரும்போகமாகும். அதில் நல்ல விளைச்சலைப் பெற கடுமையாக உழைப்போம். இப்போது நமக்கு இருக்கும் ஒரே உதவி நாம்தான். வெளியாள்களின் உதவி இப்போது முடிந்துவிட்டது. இந்தியா எங்களுக்கு உதவி செய்துள்ளது, உலக வங்கி மற்றும் பிற நாடுகள் எங்களுக்கு உதவி செய்துள்ளன. இந்தச் சலுகைகளுடன், விவசாயத்துடன் நமது விவசாயப் புரட்சியைத் தொடங்குவோம்.

**அரசாங்கத்திடம் எதிர்பார்க்கவேண்டாம்**

அரசாங்கத்திடம் இருந்து எல்லாவற்றையும் எதிர்பார்க்கக்கூடாது. இப்போது அரசாங்கத்தின் மூலம் வாழும் காலம் முடிந்துவிட்டது. இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகள் தீர்வு காண வேண்டும் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். நாம் அதை செய்ய வேண்டும். ஒன்றிணைந்து இந்த அழுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரவேண்டும் என்று மக்கள் கேட்டுக் கொள்கின்றனர். அந்த செய்தியை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பழைய அரசியலைக் கடைப்பிடிப்பதில் அர்த்தமில்லை. நாடாளுமன்றத்தில் கட்சிகளை மாற்றினால் நாட்டின் பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கும் என மக்கள் நினைக்கவில்லை. அதனால்தான் இந்த இளைஞர்கள் வந்து தங்கள் எதிர்ப்பை தெரிவித்தனர். நான் அதனை அமைதிப் போராட்டம் என்கிறேன். பிற்காலத்தில் மற்றவர்கள் அதை வன்முறைப் போராட்டமாக மாற்றினர். ஏன் இந்தக் குழு இங்கு வந்தது ? இந்த பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். இதை விட்டுவிடாதீர்கள். தேர்தல் இருக்கிறது என்று ஓடிவிடாதீர்கள். அதற்கு முன்னர், முன் வந்து இந்த வேலையைச் செய்யுங்கள்.

**அனைவரையும் வரச் சொல்லுங்கள்**

இன்று 3 கட்சிகளை ஆதரித்தவர்கள் இங்கு உள்ளனர். ஐக்கிய தேசியக் கட்சி, மொட்டுக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியனவே அந்த மூன்று கட்சிகளும். ஆனால், நான் இதை உங்களோடு மட்டும் மட்டுப்படுத்தவில்லை. மற்ற கட்சியினரையும் வரச் சொல்லுங்கள். ஐக்கிய மக்கள் சக்தியையும் வரச் சொல்லுங்கள். ஜே.வி.பி.யையும் வரச் சொல்லுங்கள். அவர்கள் ஒரு பங்கு எடுத்து, நம்மைப் போல ஏக்கருக்கு இரண்டு மடங்கு விளைச்சல் கிடைத்தால், அரசாங்கத் துக்குத் தாருங்கள் என்று சொல்லலாம். ஆனால் நீங்கள் அதைச் செய்ய முடியாது என்றால், அது ஒரு விடயமே இல்லை. அதிகாரம் தேவைப்பட்டால், உங்களால் வேலை செய்ய முடியும் என்பதைக் காட்டுங்கள். கிராம மட்டத்துக்கு வந்து அதனைச் செய்யுங்கள். அனைத்துக் கட்சிகளுடனும் பேசி அனைவரையும் ஒன்றிணைக்க விரும்புகிறேன். மீண்டும் பழைய நிலைக்குச் செல்வதில் அர்த்தமில்லை. ஊடகங்களும் இதை நினைவில் கொள்ளவேண்டும். நாம் அனைவரும் ஒன்றாக முன்னேறுவோம் என்று நான் கூற விரும்புகிறேன்.

ஐக்கிய தேசியக் கட்சிதான் ஆதாரம். ஏனைய அனைத்துக் கட்சிகளும் அந்த மூலத்திலிருந்து வந்தவையே. அந்த மூலத்துக்கு திரும்பும்படி நான் சொல்லவில்லை. ஆனால் அனைவரும் ஒன்றிணைந்து நாட்டைக் கட்டியெழுப்புவோம். நாம் இணைந்து பணியாற்றும்போது, புதிய அரசியல் கோட்பாடு நமக்குக் கிடைக்கும். பழைய பாதையில் செல்ல முடியாது. ஒரு புதிய முறைக்கு செல்லலாம். நாம் ஒரு விநயமான அரசியல் பயணத்தை மேற்கொள்ளவேண்டும். இன்று தேர்தலுக்குச் சென்று ஆட்சியைப் பெற்றுவிடலாம் என்று யாரும் நினைக்கவேண்டாம், இதுதான் உண்மை. உண்மையைப் பேசுவோம். எனவே, அனைவரும் இந்தப் பொறுப்பை ஏற்றுச் செயற்படுவோம் - என்றார். (அ-ஒ-இ)

## 'ரணில்...

விகாரையின் விகாராதிபதி கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

மிஹிந்தலை புனிதத் தளத்துக்கு ஜனாதிபதி நேற்று பயணம் மேற்கொண்டு சமய வழிபாடுகளில் ஈடுபட்டு ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டார்.

இங்கு அனுசாசன உரை நிகழ்த்திய கலாநிதி வண. வலவாஹெங்குனவெவே தம்மரதன நாயக்க தேரர், 'ஒரு விடயம் நடக்கவேண்டுமாயின் தகுதியானவர்களுக்கே அது வழங்கப்பட வேண்டும்' என்று ஹுனுவடயே கதையில் கூறப்படுகிறது. அன்று பல ஊடகங்களும் அரசியல்வாதிகளும் உங்களின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தினர். தெற்கே போய் பயங்கரவாதி என்கிறார்கள், நாட்டை ஆட்சி செய்த ஆட்சியாளர்களே அவ்வாறு கூறினார்கள். அதே போன்று, பல அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் இருந்தன. 'ரணிலால் முடியாது' என்று கூறிய அந்தக் கருத்தை 'ரணிலுக்கு ஜனாதிபதி பதவி வழங்க வேண்டும்' என்று கூறி, அன்று நமது மங்கள சமரவீர அதனைத் திருத்தி முன்வைத்தார். இவரைப்போலவே ஸ்ரீபதி சூரியஆராச்சி உட்பட இன்னும் பலர் இருக்கிறார்கள்.

1989 ஆம் ஆண்டில் எல்.ரீ.ரீ.ஈ ஒரு பக்கம், இன்னொரு பக்கம் மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி.) என்பன செயற்பட்டன. டிரான்ஸ்போர்மர்கள், தொழிற்சாலைகள் அனைத்தும் தீப்பிடித்து எரிந்தன. மறுபுறம் குண்டுகள் வெடித்தன. ஆனால் அந்த நேரத்தில் கூட, நாடு இத்தகைய அழுத்தங்களுக்கோ, இவ்வளவு கடினமான சூழ்நிலைக்கோ தள்ளப்படவில்லை.

இன்று, ஒரு பக்கம், கொரோனா தொற்று, மறுபக்கம், அரசியல் ஸ்திரமின்மை. அதே போல் இனவாதம், மதவாதம் அனைத்தும் உள்ளன. நாடு இருந்தாலும், இறுதியில் நாட்டில் சட்டம் இல்லாமற் போனதை நாம் அறிவோம். பொலிஸாரின் வாகனங்களை போதைப் பொருள் பயன்படுத்தியவர்கள் சோதனை செய்கின்றனர். சட்டத்தை தனி நபர்கள் கையில் எடுத்தனர். பொலிஸாரை அடிக்க ஆரம்பித்தனர். ஆயுதங்கள் திருடப்பட்டன. இதுபோன்ற பல்வேறு விடயங்களைச் செய்தார்கள்.

இறுதியில், ஒரு வரம் போல் இந்த நாட்டுக்கு நல்லது செய்ய முன் வந்தீர்கள். உங்கள் வீடு கூட றோயல் கல்லூரிக்கு எழுதப்பட்டுள்ளது. உலகத்திலோ அல்லது இலங்கையிலோ உங்களுக்கு வேறொரு அங்குல நிலம் கூட இல்லை. இருந்தவையும் பல்கலைக்கழகங்களுக்கும் நிறுவனங்களுக்கும் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. அப்படிப்பட்ட ஒரு தன்னலமற்ற குணம் கொண்டவர் தான் நமது ரணில்.

கடந்த காலங்களில் அவர் கூறியவற்றை மக்கள் ஏளனமாகப் பேசினர், நகைப்புக்கு உள்ளாக்கினர். ஆனால், கடைசியில், இந்த கடினமான நேரத்தில் தண்டவாளத்தில் தலையை வைத்தது போல ஒரு செயலைச் செய்ய வேண்டியதாயிற்று. பிரதமர் பதவியை ஏற்றார், ஜனாதிபதி பதவியையும் ஏற்றுக்கொண்டார். ஏனையோருக்கும் ஜனாதிபதிப் பதவியை ஏற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது. ஆனால் யாரும் ஏற்க முன்வரவில்லை.

என்ன கூறினாலும் கடைசியில் அரச பதவியைப் பெறுவதற்கும் புண்ணியம் செய்திருக்க வேண்டும். இந்த நாட்டைப் பொறுப்பேற்கவும், இந்த மாபெரும் புனித பொக்கிஷங்களுக்குப் பொறுப்பாக இருப்பதற்கும், பல்வேறு மதங்கள் மற்றும் வெவ்வேறு இனங்கள் அனைத்தையும் பொறுப்பேற்கக் கிடைப்பதும் ஒரு அதிர்ஷ்டம் - என்றார். (அ-ஒ-இ)

## பெற்றோல்...

நிலையங்கள் கொள்வனவு செய்வதற்கு பின்னடிக்கின்றன என்று இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வடபிராந்திய கிளையினர் தெரிவித்தனர்.

'கியூஆர்' குறியீட்டு முறைமைக்கு அமைவாக எரிபொருள் வழங்கலை மேற்கொள்ளாத 12 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான விநியோகம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிறுத்தப்பட்டுள்ளது. அந்த 12 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்குள் வடக்கில் எந்தவொரு நிரப்பு நிலையமும் உள்ளடங்கவில்லை .

நாள் ஒன்றுக்கு 25 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கான பெற்றோல் விநியோகிக்க முடியுமாக இருக்கின்றபோதும் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்வனவில் ஆர்வம் செலுத்தவில்லை. 'கியூஆர்' குறியீட்டுக்கு அமைய விநியோகம் நடைபெறுவதால் எரிபொருள் நிரப்பு நிலையங்கள் கொள்வனவு செய்த பெற்றோல் தேங்கியுள்ளமையாலேயே இவ்வாறு அவை கொள்வனவில் ஆர்வம் செலுத்தாமைக்கு காரணம் - என்றும் வடபிராந்தியக் கிளையினர் சுட்டிக்காட்டினர். (ஒ-5)

## நேருக்குநேர்...

ஏ - 9 பிரதான வீதியில் வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. சம்பவத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஆனந்தகுமார் கேதீஸ்வரன் (வயது - 22) என்ற இளைஞரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த லொறியுடன் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியது. சம்பவ இடத்திலேயே இளைஞர் உயிரிழந்துள்ளார்.

சட்டவிரோதமாக கால்நடைகள் ஏற்றிச் சென்று கொண்டிருந்த லொறியே விபத்தை ஏற்படுத்தியதாக பொலிஸார் குறிப்பிட்டனர். (அ-ஒ-110)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அடுத்த மாதம் முதல் நீர்க்கட்டணம் உயர்வு

கொழும்பு, ஓக. 22

அடுத்தமாதம் முதலாம் திகதி தொடக்கம் நீர்க் கட்டணம் 70 வீதத்தால் அதிகரிக்கப்படவுள்ளது எனத் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் சபையின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவிக்கையில்:

குறைந்த வருமானம் பெறுவோரின் வீடுகள் மற்றும் அரச பாடசாலை களில் குடிதண்ணீர்க் கட்டணம் உயர்த்தப்படமாட்டாது.

வணிக இடங்கள் மற்றும் நிறுவனங்களுக்கான தண்ணீர்க் கட்டணம் உயர்த்தப்படும்.

ஆனால், உயர்த்தப்படும் கட்டணத்தின் தொகை தொடர்பில் தீர்மானம் எடுக்கப்படவில்லை. எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் மின்கட்டண அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் சபையின் செலவைக் குறைக்கும் முகமாக இவ்வாறு நீர்க்கட்டணம் அதிகரிக்கப்படவுள்ளது- என்றார். (ச-இ)

## இலங்கைக்கு நிலக்கரி வழங்க முன்வந்தது ரஷ்ய நிறுவனம்!

கொழும்பு, ஓக. 22

நுரைச்சாலை அனல்மின் நிலையத்துக்கு நிலக்கரி வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்துள்ளது என லங்கா நிலக்கரி நிறுவனத்தின் தலைவரும், முகாமைத்துவப் பணிப்பாளருமான ஜகத் பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ரஷ்யாவிடமிருந்து குறைந்த விலையில் எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கான பேச்சு தூதரக மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் நிலக்கரி விநியோகத்துக்கான விலைமனு கோரலுக்குப் பதிலளித்த இரண்டு நிறுவனங்களில் ரஷ்ய நிறுவனத்தில் ஏலம் பெறுவதற்கான வாய்ப்புகளே அதிகம் காணப்படுகின்றன- என்றார். (ச-இ)

# இலங்கை மக்களுக்கு ரூ.250க்குப் பெற்றோல்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு



**கொழும்பு, ஓக. 22**

**இலங்கை மக்களுக்கு 250 ரூபாவுக்குப் பெற்றோலை வழங்கக்கூடிய நிலைமை தற்போது காணப்படுகின்றது என்று தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினரான சம்பிக்க ரணவக்க.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

உலகச் சந்தையில் எரிபொருள் விலையைப் பார்க்கும்போது உள்நாட்டில் பெற்றோலின் விலையைக் கணிசமாகக் குறைக்க முடியும்.

மசகு எண்ணெய் பரல் ஒன்றின் விலை 120 டொலரில் இருந்து 90 டொலராகக் குறைந்துள்ளது.

ஆனால், சர்வதேச சந்தையில் ஏற்பட்ட விலைக்குறைப்புகள் எதுவும் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

விலைச்சூத்திரத்தை நியாயமான முறையில் கடைப்பிடித்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டும் -என்றார். (ம)

### மண்ணெண்ணெய்...

வகையில் 340 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. இதுவரை காலமும் 87 ரூபாவுக்கே மண்ணெண்ணெய் விற்பனை செய்யப்பட்டு வந்தது.

இந்த விலையில் தொடர்ந்தும் மண்ணெண்ணெயை விற்பனை செய்ய முடியாது என்றும் விலை அதிகரிக்கப்பட வேண்டும் எனவும் மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தொடர்ச்சியாகத் தெரிவித்து வந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் நேற்று நள்ளிரவு முதல் விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

6 மாதங்களுக்கு மேலாக மண்ணெண்ணெய் விநியோகம் பொதுமக்களுக்கு மேற்கொள்ளப்படவில்லை. விவசாயிகளுக்கும், மீனவர்களுக்கும் மாத்திரம் பங்கீட்டு அடிப்படையில் வழங்கப்பட்ட வந்தது.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு நிலையம் இயங்க ஆரம்பித்து மண்ணெண்ணெய் விநியோகம் இடம்பெறவுள்ள நிலையில் இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனால் மண்ணெண்ணெயை அடிப்படையாகக் கொண்ட விவசாயிகளும், கடற்றொழிலாளர்களும் பெரிதும் பாதிக்கப்படுவர் என்பதுடன், விவசாய உற்பத்திகளினதும், கடலுணவுகளினதும் விலைகள் இன்னும் பலமடங்கு அதிகரிக்கும் நிலையும் ஏற்பட்டுள்ளது. (அ-ஒ-5-17)

### வேலையைச்...

செல்லுங்கள். நாங்கள் வேலை செய்யாமல் பணம் வழங்கத் தயாராக இல்லை -இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்தார்.

'கீழ்மட்டத்தில் ஏராளமான அரச அதிகாரிகள் உள்ளனர். ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு சுமார் 9 அதிகாரிகள் இருப்பதாக நான் நினைக்கிறேன். அவர்களது கிராம அலுவலர் பிரிவைப் பிரித்து ஒவ்வொருவரும் பங்களிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். வேலை செய்ய முடிந்தால், வேலை செய்யுங்கள். முடியாவிட்டால் வீட்டுக்குச் செல்லுங்கள். நாங்கள் வேலை செய்யாமல் பணம் வழங்கத் தயாராக இல்லை. அந்தப் பொறுப்பை மாவட்டச் செயலர் ஏற்கவேண்டும். ஏனென்றால் நாங்கள் யாருக்கும் இலவசமாக உணவளிக்க முடியாது. ஏதாவது செய்ய வேண்டும். என்னாலும் இலவசமாகச் சாப்பிட முடியாது. இந்த நாட்டை முன்னேற்றாவிட்டால் நானும் வெளியேற வேண்டும்' என்றார் ரணில். (அ-ஒ-இ)

### பெற்றோலியக்...

ஆயினும் என்ன எதிர்ப்பு வந்தாலும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தொடரும் என்று மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புத் திட்டம் குறித்து தொழிற்சங்கங்களுக்கு முன்னரே அறிவிக்கப்பட்டுள்ளது. அரசியல் கட்சிகளுடன் தொடர்புடைய பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தொழிற்சங்கங்களே போராட்டத்தை இன்று நடத்தவுள்ளன. போராட்டம் நடத்தும் உரிமைக்கு சவால் விடுக்கவில்லை. ஆனால் பெற்றோலியம் மற்றும் மின்சாரம் ஆகிய இரண்டு துறைகளும் மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்குத் தேவையான பணிகள் மேற்கொள்ளப்படும் - என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (அ-ஒ-இ)

### பயங்கரவாதிகளிடமிருந்து...

நாட்டைக் காப்பாற்றியது போன்று இன்று தலைதூக்க [illegible]

ருந்து நாட்டைக் காப்பாற்றிய தலைவர் என்ற பெருமை ரணில் விக்கிரமசிங்கவையே சேரும் - இவ்வாறு முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்தார்.

அநுராதபுரத்தில் ஜனாதிபதி ரணில் தலைமையில் நேற்று இடம்பெற்ற மாவட்ட அபிவிருத்திக் கூட்டத்திலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணிலின் வீடு தீ வைத்து கொளுத்தப்பட்டது. எனது வீடு மட்டுமன்றி பல நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளுக்கும் தீ வைக்கப்பட்டன. இது பயங்கரவாதம் அல்லவா?, ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் நெடுஞ்சாலையில் கொல்லப்பட்டார், அது பயங்கரவாதம் இல்லையா? அவர்களில் அப்பாவிப் போராளிகளும் இருந்தனர், அரசைக் கவிழ்க்க பெரும் சதி செய்தவர்களும் இருந்தனர்.

அந்த முறை நடைமுறைப்படுத்தப்பட்டால் உள்ளூராட்சி மன்றங்களையோ மாகாண சபையையோ செயற்படுத்த முடியாது. நாடாளுமன்றத்துக்கு தீ வைக்க வந்தபோதுதான் அவர்கள் தவறிழைத்தார்கள். இவர்கள் சார்பாக சில சட்டத்தரணிகள் முன்னிலையானார்கள். ஆனால், நாடாளுமன்றத்துக்கு தீ வைத்தால் நீதிமன்றத்தையும் தாக்க வருவார்கள். இவ்வாறு பெரும் அழிவிலிருந்து நாட்டைக் காப்பாற்றிய ரணிலை என்றென்றும் மதிப்போம் - என்றார். (அ-ஒ-இ)

### வசந்த...

தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே

மற்றும் ஏனைய இருவர் தொடர்பிலான விசாரணைகள் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரையின் பேரில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவர்கள் அரச விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார்களா அல்லது பயங்கரவாதச் செயற்பாடுகளில் ஈடுபட்டார்களா என்பது தொடர்பில் விசேட விசாரணைகளை மேற்கொள்ளுமாறு குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. (அ-ஒ-இ)

English Classes
Gr. 1 to O/L
Grammar and Syllabus
வீடு வந்து கற்பிக்கப்படும்
T.P.: 077 331 4608

IELTS வகுப்புகள்
புதிய பிரிவுகள் 23.08.2022 அன்று ஆரம்பம். 10 வருட காலம் IELTS அனுபமுள்ள ஆசிரியர். ஒரு பிரிவில் 5 பேர் மட்டுமே. தனிப்பட்ட கவனிப்புகள். 6 புள்ளிகளுக்கு மேல் எடுப்பதற்கான உத்தரவாதம். தனிப்பட்ட நேரத் தெரிவுகள். மிகக் குறைந்த கட்டணங்கள். 22.08.2022 இற்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
(CS 20376) (3/6)
077 395 0857

காணி விற்பனைக்கு
யாழ் நாவற்குழியில் 15 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு
- A.09 பிரதான வீதி முகப்புடனும் மற்றும் 20 அடி பாதையுடன் பின் பக்கமாகவும்
- நாவற்குழி சந்தியில் இருந்து 500 m தூரத்தில் மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A.09 வீதியில் இருந்து 200 m தூரத்தில் 20 அடி பாதையுடன் அமைந்துள்ள காணி ஒரு பரப்பின் விலை மூன்று லட்சம் (300000/-)
- இயற்கை சூழலுடன் வியாபார நிலையங்கள், களஞ்சியசாலைகள், மண்டபங்கள், வீடுகள் அமைப்பதற்கு உகந்த சூழல்.
பார்வை இடும் நேரம் :காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு
076 490 5403, 076 491 2493,076 490 6029

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



... 22.08.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.